www.padippakam.com


# செஞ்சக்தி

செய்திபத்திரிகையாக பதிவுசெய்யப்பட்டது

1998 ஜூன் அணி 02 படை 11 நன்கொடை 7/=

மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வ செய்தித்தாள்


## வன விலங்கின் பணத்தில் அமைச்சர் உல்லாசம்!

வன விலங்கு திணைக்களத்தனி கீழ் செயல்படும் G.E.F. என்ற உலக சுற்றாடல் திட்டத்திற்கு உரிய பணத்தை பயன்படுத்தி பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரும் பாராளுமன்ற பிரதி சபாநாயகருமான ரட்னசிறி விக்கிரமநாயக்காவின் ஹோட்டல் கட்டணத்தை செலுத்தியிருப்பதாக அத்திணைக்கள தகவல்கள் 'செஞ்சக்திக்கு' தெரிவிக்கிறது.

இத்தகவல் அம்பலத்துக்கு வருவது கடந்த மார்ச் மாதம் 20,21 திகதிகளில் உடவலவையில் இருக்கும் 'அதுரு செவன' வில் நடைபெற்ற நான்கு யானைகளை காட்டுக்கு அனுப்பும் வைபவத்தின் போதே இவ்வாறு நடந்துள்ளதாக தெரியவருகிறது. மேற்குறிப்பிட்ட G.E.F. திட்டத்தின் இணைப் பதிகாரியாக செயல்படும் நாலனி அமரசேகர அமைச்சரின் இந்த செலவுகளை பொறுப்பேற்று பூர்த்தி செய்யும் பணிகளில் செயல்பட்டுள்ளார்.

2ம் பக்கம் பார்க்க....

## யாழ் மேயரைக் கொன்றது ஈ.பி.டி.பி....!

யாழ் மேயர் சரோஜினி யோகேஸ்வரனை படுகொலை செய்தது ஈ.பி.டி.பி.யின் ஆயுத கும்பல் தானென இக்கொலை தொடர்பாக விசாரணை நடத்துவோர் முடிவு செய்துள்ளதாக தெரியவருகிறது. சரோஜினி யோகேஸ்வரன் கொலைசெய்யப்பட்ட பிரதேசத்தினுள் எல்.ரி.ரி.ஈ இயக்கத்துக்கு செயல்படுவதற்கான சந்தர்ப்பம் இல்லாததாலும் அவர் (சரோஜினி) எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தினரோடு நெருங்கிய புரிந்துணர்வு மிக்க தொடர்பை கொண்டிருந்ததனால் எல்.ரி.ரி.ஈ அல்லாத குழுக்களால் தான் இக்கொலையை செய்திருக்க முடியும் என்பது அது தொடர்பாக விசாரணை நடத்துவோர் நம்புவதாக தெரிய வருகிறது. யாழ் பிரதேச வாசிகளோடு நெருங்கிய தொடர்பைக் கொண்டு வரவேற்பை பெற்றிருந்த இவரது நடவடிக்கைகள் பாதிப்பை கொடுத்தது. யாழ் நகர் தமக்கு மாத்திரமே சொந்தமென நினைத்து அதை தமது இருப்பில் தக்கவைத்துக் கொள்வதற்காக காய்களை நகர்த்திக் கொண்டிருக்கும் ஈ.பி.டி.பி. அதனால் ஈ.பி.டி.பி.யினால் இக்கொலையை செய்திருக்க முடியும் என்று குறிப்பிட்ட விசாரணையை மேற்கொள்ளும் குழு நம்புகிறது.

# இந்தியாவுக்கு எதிரான யங்கி தலையீட்டுக்கு துரும்பாக புலிகள் இயக்கம்

**இலங்கை அரசாங்கத்தின் விசேட அழைப்பின் பேரில் கடந்த சில தினங்களுக்கு முன்பு இலங்கை வந்த ஐ.நா. சபையின் விசேட பிரதிநிதி ஒலரா ஒட்டுணுவுக்கூடாக புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் விசேட செய்தி ஒன்றை ஐ.நா. சபை செயலாளர் கோபி அனான் உள்ளிட்ட அதிகாரிகள் சிலருக்கு அனுப்பிவைத்துள்ளதாக தெரிகிறது.**

இலங்கை அரசாங்கம் ஒலரா ஒட்டுணுவை இலங்கை வருவதற்கு அழைத்தது யுத்தத்தில் புலிகள் இயக்கம் சிறுவர்களை ஈடுபடுத்தப்படுவது குறித்து சுட்டிக்காட்டுவதற்கே என்றாலும் இறுதியில் நடந்தது என்னவென்றால் புலிகள் இயக்கதத்தின் ராஜ தந்திரியாக ஒலரா ஒட்டுணு ஆனமை குறித்து அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

வன்னிக்காட்டில் ஒலரா ஒட்டுணுவுடன் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகர் என்டன் பாலசிங்கம் மற்றும் தமிழ்ச்செல்வம் ஆகிய பிரதிநிதிகளுடன் மணிக்கனக்காக பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதுடன் அதன் போது தமிழ்ச் செல்வம் தனது தலைவரின் விசேட செய்தியையும் ஒலரா ஒட்டுணுவிடம் கையளித்துள்ளார். தமிழ்ச்செல்வம் அதனை ஐ.நா. சபையின் தலைவரின் கையில் ஒப்படைக்கும் படி ஒலரா ஒட்டுணுவிடம் கையளித்துள்ளார். வேலுப்பிள்ளை பிரபாகரனின் கையெழுத்தைத் தாங்கிய அந்த செய்தியில் தனது மக்களுக்கு எதிராக சிங்கள அரசாங்கமும் சிங்கள இராணுவமும் பாரிய அடக்குமுறையை கட்டவிழ்த்துள்ளதாகவும் அந் நிலமையை தடுப்பதற்கு தற்போது நடந்துவரும் போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கு ஐ.நா. சபையின் மத்தியத்துவம் தேவை என்றும் அதற்காக ஐ.நா.சபைத் தரப்பில் முன்வைக்கும் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு தமது அமைப்பு தயார் என்றும் அதற்குப் புறம்பாக தமது அமைப்பு

2ம் பக்கம் பார்க்க........


## இடதுசாரிகள் கருத்தரங்கு

"இடதுசாரிகள் ஏன் ஐக்கியப்பட வேண்டும்?"

என்ற தலைப்பில்

மக்கள் விடுதலை முன்னணியினால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள பகிரங்க கருத்தரங்கு

ஜூன் 22 மாலை 2.00க்கு

கொழும்புபொது நூலக கேட்போர் கூடத்தில்

☆ ... சமாஜ கட்சி


☆ ஐக்கிய சோஷலிச கட்சி

☆ ... இயக்கம்

இன்னும் பல அமைப்புகளின் பிரதிநிதிகள் கருத்தரங்கில் உரையாற்றுவர்.


## ம.வி.மு ஜப்பான் கிளை உலக தொழிலாளர் தினத்தை கொண்டாடியது!



1998 உலக தொழிலாளர் தினத்தை நினைவு கூரந்து மக்கள் விடுதலை முன்னணி ஜப்பான் கமிட்டியினால் நடாத்தப்பட்ட மே தின ஊரவலத்தின் சில கட்டங்கள் படத்தில்.இந்த மேதின த்திற்க்கு ஜப்பானில் வசிக்கும் இலங்கையர் பெரும்பாலானோர் கலந்துகொணடனர் ஊர்வல முடிவில் கூட்டம் ஹிபியா மைதானத்தில நடைபெற்றது.

## அம்மையாருக்கு நயில் நதியில் மாளிகை!

1500 லட்ச ரூபாய் செலவில் நூற்றுக்காணக்கான மக்களிற்குறிய நிலத்தை பறித்து அவர்களை நடு வீதியில் நாதியற்ற நிலமைக்கு தள்ளி தத்தளிக்க விட்டுவிட்டு மாதிவெல பிரதேசத்தில் அமைக்கப்போகும் 'Chandrika Place' க்கு பிறம்பாக நயில் நதிக்கருகாமையில் சொகுசு மாளிகை ஒன்றை மெடம் வாங்கியிருப்பதாக எகித்திப்பில் தொழில் புரியும் இலங்கையர் சிலர் அனுப்பிய தகவல் தெரிவிக்கின்றது.

உலகில் முதல் தரமான செல்வந்தர்களுக்கு (பொப் பாடகர்கள், கப்பல் உரிமையாளர்கள்) மாத்திரம் வரையறுக்கப்பட்ட இந்த நயில் நதிக் அருகில் அமைந்திருக்கும் ஒரு மாளிகையின் மதிப்பு (விலை) 10 கோடி அமெரிக்க டொலர்களாகும்.

நமது அம்மையார் வாங்கியுள்ள இந்த மாளிகையில் இன்னுமோர் அதிவிஷேட சலுகைகள் பலவும் இருப்பதாக தெரிய வருகிறது.

2ம் பார்க்க பார்க்க......

படிப்பகம்

# G 8 மாநாட்டுக்கு எதிர்ப்பு.

## வறிய நாடுகளின் கடனை இரத்துச் செய்!




கடந்த வாரம் G 8 செல்வந்த நாடுகளின் தலைவர்களின் கூட்டான G 8 மாநாடு இங்கிலாந்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த போது வீதி முழுவதும் மக்கள் வெள்ளம் திரண்டிருந்தது வறிய வளர்ந்து வரும் நாடுகளை கடன் சுமைகளிலிருந்து விடுவிக்கும் படி கேட்டு 50,000 த்துக்கும் அதிகமான மக்கள் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்துக் கொண்டனர். சுமார் 6 மைல் சுற்றளவில் பரந்திருந்த மக்கள் இவ்வாறு கோஷங்களை எழுப்பிக்கொண்டிருந்த வேளையில் G 8 மாநாட்டின் பிரதிநிதிகள் அண்மையில் உள்ள ஓர் அரச கட்டிடத்தில் தனது மாநாட்டை நடத்திக் கொண்டிருந்தது.

ஆர்ப்பாட்டகாரர்களிடையே மாணவர்கள், பெண்கள் உட்பட பல்லின மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் சகல மக்களினதும் கருத்து நிபந்தனையின்றி இந்த கடன்களை இரத்துச் செய்ய வேண்டுமென்றே கோஷமிடப்பட்டிருந்தது. ஓர் ஆர்ப்பாட்டக்காரர் கூறியதாவது, இந்த G 8 செல்வந்த நாடுகளின் தலைவர்கள் வறிய நாடுகளுக்கு மானியம் வழங்க வேண்டுமென உறுதியளித்தே இவ்வாறு கூடுகின்றனர். ஆனால் கூட்ட முடிவில் இவர்கள் விடைபெறும் போது இந்த வறிய நாடுகளை மென்மேலும் வறுமைக்குள்ளும், நெருக்கடிகுள்ளும் அமிழ்த்திவிட்டும், மக்களை கொடிய வறுமைக்குள் தள்ளிவிட்டே விடைபெறுகின்றனர். வறிய நாடுகளின் மக்கள் மாத்திரமல்ல எம்மால் கூட இந்த அநீதிகளை பொறுத்துக் கொள்ள முடியாது' எனஉறுதியான குரலில் அவர் கூறினார்.

## சுதந்திர குதிரைகள் மரணம்!

50வது சுதந்திர பொன்விழாவுக்காக 15 லட்சம் கொடுத்து குதிரைகளை தருவித்து சார்ள்ஸை வரவேற்பதற்காக தருவிக்கப்பட்ட குதிரைகள் உட்பட மிகவும் பெருமதிமிக்க குதிரைகளும் இறந்து போயுள்ளதாக தெரிய வருகிறது. கடந்த இரண்டு வாரத்தில் மாத்திரம் 11 குதிரைகள் இறந்துள்ளன. அதேவேளை 1993 அவுஸ்திரேலியாவிலிருந்து 8 லட்சம் ரூபாய் கொடுத்து கொண்டுவரப்பட்ட (தற்போது அந்த குதிரை ஒன்றின் விலை 20 லட்சமாகும்) குதிரைகளும் அடங்கும். இந்த குதிரைகள் இறப்பதற்கான காரணம் பொலிஸ் திணைக்களத்தில் இந்த குதிரைகளை பாதுகாக்கும் வேலை திட்டம் இல்லாத படியால் தான் இவை இறப்புக்கு முக்கிய காரணமாகும்.

முதல் குதிரை இறந்த பிறகு பேராதனை பல்கலைக்கழக மிருக வைத்திய பீடத்திலிருந்து வைத்தியர்கள் மரண பரிட்சை செய்த பின்பு அதற்குரிய அறிக்கையை சமர்ப்பித்த போதும் கூட இந்த இரண்டு வார்த்தில் 11 குதிரைகள் இறந்துள்ளதாக தெரியவருகின்றது. பொலிஸ் திணைக்களம் குதிரைகள் சாகும்வரை பார்த்துக் கொண்டிருப்பதாகவும், மீண்டும் மக்களின் பணத்தை பயன்படுத்தி குதிரைகளைகொண்டுவருவதற்கானலஞ்ச மோசடியில் ஈடுபடுவதற்கான தேவைகள் இவர்களுக்கு இருப்பதாக தெரியவருகின்றது.

## இடதுசாரி ஐக்கிய நடவடிக்கை தொடர்கிறது!

அண்மையில் மக்கள் விடுதலை முன்னணியனால் இந்நாட்டில் 'இடதுசாரி' அமைப்புகள் முற்போக்கு தனிநபர்கள் ஆகியோரிடையே ஐக்கியத்தை உருவாக்குவதற்கான கலந்துரையாடலின் 2வதுகட்டமாக கடந்த 10ம் திகதி நடத்தப்பட்டதாக தெரியவருகிறது.

நவ சமசமாஜ கட்சி,ஐக்கிய சேஷலிச கட்சி,ஜனநாயக பொதுசன இயக்கம்,தியச கலவி வட்டம் உட்பட இன்னும் பல அமைப்புகளிடையே நடத்தப்பட்ட கலந்துரையாடலின் பலனாக இம்மாதம் 22ம் திகதி கொழும்பு பொது நலக கேட்போர் கூடத்தில் "இடதுசாரிகள் ஏன் ஐக்கியபட வேண்டும்" என்ற தலைப்பில் கருத்தரங்கொன்று நடத்துவதற்கு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. மக்கள் விடுதலை முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது இக்கருத்தரங்கை எதிர்வரும் நாட்களில் ஏனைய அமைப்புகளின் தலைமையில் வெவ்வேறு பிரதேசங்களில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

இது தொடர்பாக 'செஞ்சக்திக்கு'தனது கருத்தை தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணி செயலாளர் நாயகம் தோழர் டிலவின் சிலவா அவர்கள் கூறியதாவது,"ஐக்கிய நடவடிக்கைகள் ஊடாக ஐக்கிய முன்னணி வரை"எமது வேலைதிட்டமாகும்.ஐக்கிய நடவடிக்கையின் முதல் வேளையாக ஜீன் 22ம் திகதி கருத்தரங்கை இனம் கான முடியும் என சுட்டிக்காட்டினார்.

## இன்கோ ஊழியர் போராட்டம்!

நவரெலியாவரையறுக்கப்பட்ட 'பெயார்ட் வெயார் இன்டர்பெஷன்' நிறுவனத்தில் 1800 ஊழியர்கள் பல கோரிக்கைகளை முன்வைத்து வேலைநிறுத்தத்தை ஆரம்பித்துள்ளனர்.முடிவுகளின்றி தொடர்ந்த வேலைநிறுத்தத்தை வெற்றிகரமாக முடிப்பதற்காக 1800 ஊழியர்களும் 'அனைத்து நிறுவன ஊழியர் சங்கத்தில்'சேர்நது அதன் அங்கத்துவத்தை பெற்று' தொழிற்சங்க கிளையும் தாபித்துள்ளனர்.அனைத்து நிறுவன ஊழியர் சங்கத்தின் பிரதிநிதி தோழர் ஒருவர் ஊழியர் தோழர், தோழியரை சந்தித்து தொழிற்சங்க போராட்டத்தை முன்னெடுக்கும வழிமுறைகளை விளக்குவதை படத்தில் காண்கிறிரகள்



---

வனவிலங்கின
1ம் பக்கதொடரச்சி......

அந்த வைபவத்திற்காக நாலனி குணசேகரவால் அமைச்சரை விஷேட அதிதியாக கலந்து கொள்ளும்படி அழைப்பு விடுத்துள்ள அதேவேளை, அதன் பிறகு இரண்டு நாட்களாக நாலனி குணசேகராவின் உயர்ந்தபட்ச ஒத்துழைப்பும் அனுசரணையோடு உடவளவை யிலிருக்கும் 'சனாரி' ஹோட்டலில் தங்கியுள்ளார். பொது நிர்வாக கட்டளைக்கேற்ப, அமைச்சர் ஒருவரின் செலவுக்கு அனுமதியிருப்பது 420 ரூபா மாத்திரமாக இருந்ததும், இந்த இரண்டு நாள் உடவளவ்வை 'சனாரி' ஹோட்டல் கட்டணம் மாத்திரம் 23,330,80 ரூபாய் பணத்தை வன விலஙகுகளின் பணத்திலிருந்து செலுத்தப்பட்டுள்ளது. இந்த 23,330,80 செலவு குறிப்பிட்ட ஹோட்டலின் ரசிது இலக்கம் 1494, 1483, 1488, 1482, 248 இலக்கங்களை கொண்ட ரசிதுகள் இச்சம்பவத்தை மேலும் உறுதிப்படுத்துகிறது. இந்த இரண்டு நாட்களாகவும் அமைச்சர்கள் சகல குறைபாடுகளையும் தேடிப்பார்த்து, அவரது உல்லாச இருப்பிற்காக கைகளை வீசி செலவு செய்த நாலனி குணசேகராவென்றும், குறிப்பிட்ட திணைக்களத்தில் ஏற்பட்டதாக கூறப்படும் பெருமளவிலான மோசடிகளுக்கு குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் இவர் தொடர்பாக அமைச்சர் கொண்டுள்ள நிலைப்பாட்டில் பெரும் சந்தேகம் கிளம்புவதாக தெரியவருகிறது. அதனால் தான் கடும் குற்றச்சாட்டை கொண்டுள்ள இவருக்கு எதிராக அமைச்சர் நடவடிக்கை எடுக்க மறுக்கிறார்...!

---

நயில் நதியில்
1ம் பக்கத் தொடர்ச்சி....

அதாவது 'Boat Yart' கடல் தடாகம் ஒன்றும் அமைந்திருக்கிறதும் இதற்கு முன்பும் பல சந்தர்ப்பங்களில் அம்மையார் நயில் நதியில் படகுச் சவாரி செல்வதும் ஓய்வு எடுப்பதற்கு வந்திருந்த சந்தர்ப்பத்தில் இவ்விடத்தில் மாளிகை ஒன்று வாங்குவதற்கு தீர்மானித்திருந்ததாக தெரிய வருகிறது. இது தொடர்பாக வினவப்பட்ட போது கிடைத்த மேலதிக தகவல்களுக்கேற்ப, இந்த மாளிகையை விலைக்கு வாங்கியிருப்பது கோடிஷ்வர அராபிகாரர் ஒருவராகும். அவரே இந்த மாளிகையை 'பரிசாக' அம்மையாருக்கு வழங்கியுள்ளதாக கூறப்படுகின்றது. இந்த அராபியரால் அம்மையாருக்கு கிடைத்த பரிசும் சந்திரிகா அரசாங்கத்தினால் ஓர் அராபியருக்கு கிடைத்த யுனை டியமெய பரிசுக்குமிடையில் நேரடியான தொடர்பு இருப்பதாக மேலதிக தகவல் மூலம் தெரியவருகின்றது.

---

இந்தியாவுக்கு எதிரான
1ம் பக்கத்தொடர்......

இலங்கையும் ஏனைய சில நாடுகளும் விதித்திருக்கும் தடையை நீக்கும் படியும் தமது இயக்கத்தை சர்வதேச மட்டத்தில் அங்கீகரிக்க உதவி புரியும் படியும் அச்செய்தியில் பிரபாகரன் கோரியுள்ளார்.

எவ்வாறு இருந்த போதும் இக்கடிதம் பென்டகன் எனப்படும் அமெரிக்க மத்திய உளவுச் சேவை (சீ.ஐ.ஏ.) யின் தலைவரின் கைக்கு கிடைத்திருப்பதாகவும் அவருக்கூடாக அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிண்டனை அடைந்திருப்பதாகவும் தெரியவருகின்றது. கடந்த சில தினங்களுக்கு முன் அணு ஆயுத பரிசோதனை நடத்திய இந்தியாவுக்கு எதிராக பயன்படுத்தக்கூடிய பிராந்திய கருவியாக புலிகள் இயக்கத்தை பிரயோகிக்கவும் அமெரிக்க அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர். இதற்காக பிரபாகரனின் மேற்படி கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அமெரிக்கா தயாராகி வருவதாக தெரிகிறது.

தற்போது இந்தியாவில் ஆட்சிபுரியும் பி.ஜே.பி. அரசாங்கத்தில் பலம் பொருந்திய அமைச்சர்கள் பலர் புலிகள் இயக்கத்துடன் கிட்டிய உறவை பேணி வருவதனால் அவர்களுக்கூடாக இந்திய அரசாங்கத்தின் சகல தகவல்களும் புலிகள் இயக்கத்திற்கு கிடைப்பதன் மூலமாகவும் தற்போதைய இந்திய அரசாங்கத்தை சடுதியாக உதிர்ந்து போவதற்கு புலிகள் இயக்கத்திற்கு ஆற்றல் இருப்பதாகவும் அமெரிக்க அதிகாரிகளின் கருத்தாகும். இந்த ஆற்றலை பயன்படுத்தி தமக்கு உகந்த வகையில் ஆட்டிப்படைக்கக்கூடிய நபர்களைக் கொண்ட அரசாங்கம் ஒன்று இந்தியாவில் ஏற்படுத்துவதற்கு உகந்த சூழலை உருவாக்கலாம் என்று அமெரிக்கா எதிர்பார்க்கிறது.

எவ்வாறு இருந்த போதும் இந்நிலமை புலிகள் இயக்கம் தொடர்பான அமெரிக்காகவின் நிலைப்பாடுகள் மாற்றமுறக் கூடும் என்றும் ஆயுதங்கள் நிறைந்த கப்பல்களை புலிகள் இயக்கத்திற்கு கிடைக்கச் செய்ய வாய்ப்பிருப்பதாகவும் நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது. ஒலரா ஒட்டுணுவை அழைத்ததன் மூலம் 'அரசாங்கம் செய்திருப்பது பிரபாகரனை சர்வதேச அங்கீகாரம் பெற்ற பிரமுகரை சந்திக்க ஏற்பாடு செய்ததே என இது குறித்து பல அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

www.padippakam.com



ண்டுமொருமுறை மாகாணசபைத் தேர்தலுக்காக அரசியல் களத்தை மறுசீரமைக் காட்டவண்ணமிருக்கிறது. அதன் நிமித்தமாக அவ் ஆடுகளத்தில் மோசடி, ஊழல், காடைதனங்களால் நிறைந்தும் பலவந்தமும் தான்தோன்றித்தனமும் தலைதூக்கி ன்வந்துக் கொண்டிருக்கின்றன.

கடந்த காலங்களில் அதிகாரத்துக்கு வந்தது போன்றே ஆட்சியதிகாரத்திலிருக்கும் அரசாங்கத்தினால் நடாத்திய அனைத்து தேர்தல்களைப்போலவே தொடர்ந்தும் 'க்களுக்காக' தாம் வெற்றியீட்டுவதற்கான தேர்தல் யக்கம் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் தன்மைகளும் சுபாவ நிலையும் லவிதங்களில் கொண்ட உருவங்கள். இப்போதே க்கள் முன் வெளிப்பட்டுக்கொண்டிருக்கின்றது.

அதன் ஒரு வடிவம் அதிகார போட்டியின் மூலம் வளிக்கிழம்பியிருக்கிறது. அரசாங்கத்தின் ள்ளேயும், யூ.என்.பி.யின் உள்ளேயும் இப்போது கத்தெளிவான கண்காட்சி படமாக ாண்பிக்கப்படுகிறது.

மிகவும் வேகமான முறையில் மக்களால் ாகரிக்கப்படும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் அமைச்சர்கள், உள்ளிட்ட அரசாங்கத்தினதும் தலைவிதி என்பது இங்கே அடிப்படை காரணியாக தோன்றியுள்ளது.

**இதனிடையே அவசரமாக கொண்டுவரப்பட்ட யுத்தச் செய்தித் தணிக்கையின் ஊடாக "ஜயசிக்குறு" வின் இலக்கை அடைவதற்கு இருக்கும் தேவையைக் காட்டினாலும், அது ஜெனரல் முதல் அரசாங்கம் வரை அம்பலமாகும் நடவடிக்கைக்குரிய செய்தியாகவே இருக்கிறது. தேர்தலுக்கு முன்பு அல்ல. கடந்த சுதந்திர தினத்திற்கு முதல் "ஜயசிக்குறு" இலக்கை அடைவதற்கு முயற்சித்து மூக்குடைந்த அரசாங்கம், தனது என்னத்தை கைவிட்டு விட்டு பின்நோக்கி வந்ததை மூடி மறைக்கவும், யுத்த பின்னடைவையும்,அழிவுகளையும் செய்தி தணிக்கை மூலம் யுத்த தோல்வியை மூடி மறைப்பதற்கு கடும் முயற்சியில் இறங்கியுள்ளது.**

ம்முன்னால் இருக்கும் இந்த நெருக்கடியான நிமிடத்தை மாற்றும் தந்திரோபாயங்கள் லம் பின்போட முடியாத, அவ்வாறு தேர்தலை பின்போடுவதென்பது மேலும் தமக்கு டுதலான பாதிப்பை கொண்டுவருமென்பதால், முகம் கொடுக்க நேரிட்டுள்ள மாகாணசபைத் தர்தல் அரசாங்கத்தின் தலைவிதியை தீர்மானிக்கும் ஓர் அடிக்கல்லாகுமென இப்போது ருத்துக்கள் வலுப்பெற்றுள்ளன.

தேயும் இம்முறை மாகாணசபைத் தேர்தலிலும் தமது கைவரிசையை காட்டுவதற்கு கங்கணம் கட்டியுள்ளனர்.

இதனிடையே அவசரமாக கொண்டுவரப்பட்ட யுத்தச் செய்தித் தணிக்கையின் ஊடாக 'ஜயசிக்குறு' வின் இலக்கை அடைவதற்கு இருக்கும் தேவையைக் காட்டினாலும், அது ஜெனரல் முதல் அரசாங்கம் வரை அம்பலமாகும் நடவடிக்கைக்குரிய செய்தியாகவே இருக்கிறது. தேர்தலுக்கு முன்பு அல்ல. கடந்த சுதந்திர தினத்திற்கு முதல் 'ஜயசிக்குறு' இலக்கை அடைவதற்கு முயற்சித்து மூக்குடைந்த அர்சாங்கம், தனது என்னத்தை கைவிட்டு விட்டு பின்நோக்கி வந்ததை மூடி மறைக்கவும், யுத்த பின்னடைவையும்,அழிவுகளையும் செய்தி தணிக்கை மூலம் யுத்த தோல்வியை மூடி மறைப்பதற்கு கடும் முயற்சியில் இறங்கியுள்ளது.

எப்படியாயினும் இந்த நடவடிக்கைகள் அனைத்தும் அரசாங்கத்தின் உடல் சௌக்கியத்திற்கு ஒன்றோடு ஒன்று அதிகரித்துள்ள அதேவேளை மக்களிடமிருந்து எழும் எதிர்ப்பலைகளை தடுத்து நிறுத்த முடியாதுள்ளது.

முடிவடைந்த தபால் ஊழியர் போராட்டமும், ஏனைய தொழிலாளர்களின் எதிர்ப்பலையும், தங்களால் போஷித்து வளர்க்கப்பட்ட சமுர்த்தி, விவசாய முகவர்களின் பிரச்சினையும் இங்கே விஷேட சம்பவங்களாக உள்ளது. அரசாங்கத்தின் இயலாமை, தகுதியின்மையின், பரப்பளவை இவ்வாறான சம்பவங்கள் நன்றாகவே படம் பிடித்து காட்டுபவையாகும்.

# தேர்தல் களத்தில் சொல்லும் செயலும் மக்களும்

இதேபோல் ஐ.தே.க. வசமுல்ல மாகாணசபைகளில் முன்னைய தேர்தலில் கிடைத்ததை விட கூடுதலான வாக்குகளை பெற்றுக் கொள்வது மாத்திரமல்ல, தேர்தல் இயக்கத்தின் ஊடாக மக்கள் செல்வாக்கை தம்மால் தக்கி வைத்துக்கொள்ளும் நோக்கம் அரசாங்கத்தின் தேவையாக இருந்தாலும் கூட, நடந்துக் கொண்டிருப்பவற்றை னித்து அவதானிக்குமிடத்து அத்தேவைக்கான சந்தர்ப்பம் பின்நோக்கி தள்ளப்பட்டவண்ணமே உள்ளது.

இதனால் அதிகார போட்டி மாத்திரமல்ல காடைத்தனமும், பலத்காரத்தையும் அரசாங்கத்தினால் வெளிக்கொணர்ந்த வண்ணமிருக்கிறது. ஐ.தே.க.வை தோற்கடிப்பதற்கு பதிலாக ஐ.தே.க.வை தோல்வியை தழுவச் செய்வதற்கு பதிலாக தம்மால் பலிகடாக்களாக (அரசாங்கத்திலும் சவாலாக உள்ள) அப்படியில்லையெனில் முதலமைச்சர் பதவிக்காக அரசாங்கத்திலிருந்து நீக்கப்பட்டு அவர்களை இவ்வாறான செயற்பாடுகளில் இறக்குவதென்பது அரசாங்கத்தினுள் தோன்றியுள்ள ஓர் தீர்க்கமான நெருக்கடியின் வடிவமாகும்.

இது ஊவா, மத்திய மாகாணங்களை கேந்திர நிலையமாக கொண்டு,



மறுபுறத்தில் ஐ.தே.க.வும் முகம் கொடுத்து கொண்டிருப்பது பாரியதோர் சவாலுக்கேயாகும். உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் தாம் முகம் கொடுத்த பிரதான சவாலும் ஆனால் தம்வசமிருந்த பிரதேச நகர சபைகளை பாதுகாத்துக் கொள்ள முடியாது போனது போலல்ல தமது பலத்தையும் அதிகாரத்தையும் எப்படியாவது பாதுகாத்துக் கொள்ளும் பாரிய சவாலுக்கு யூ.என்.பி. முகம் கொடுக்கிறது. **பொதுஜன முன்னணி அரசாங்கத்தை வீழ்த்திவிட்டு அரசதிகாரத்தை பறித்துக் கொள்வதற்கு எத்தனித்துக் கொண்டிருக்கும் கட்சியாக ரணில் உள்ளிட்ட ஐ.தே.க. முன்னாள்** இருக்கும் பிரதான சவால் தம்வசம் இப்போதிருக்கும் மாகாணசபைகளை மீண்டும் வெற்றிகொள்வது மாத்திரமல்ல அதற்கு அப்பாலும் தனது தகுதியை வெளிப்படுத்தி மக்கள் மத்தியில் நிலைபெறச் செய்வதே பிரதான சவாகும்.

இந்த இடத்தை நிரப்புவதற்காக தம்வசம் எவ்வாறான தகுதிகள் உள்ளதென நெருக்கடியில் ஐ.தே.க. சிக்கியுள்ளது. அது மிகத் தெளிவாக வெளிப்படையாக ஐ.தே.க.வின் தீர்க்கமாக வெளிப்பட்டுள்ள அதிகார போட்டியினாலாகும். அதன் பிரதான வாயிலாக வெளிப்படப்போவது மேல் மாகாணசபையாகும்.

மேல் மாகாணசபைக்காக கரு ஜயசூரியாவுக்கும் ஹேமா பிரேமதாஸாவுக்குமிடையே முதலமைச்சருக்காக நிலவும் போட்டி ஐ.தே.க.வில் நிலவும் போட்டிகளை விட முதல் தரமான போட்டியாகும்.

இன்னுமோர் வடிவமான பிரதேச, மாவட்ட ரீதியாகவும் தோன்றியுள்ள முரண்பாட்டை முழுமையாக தீர்த்துக் கொள்ள முடியாத முக்கிய அரசின் முடியாமையையும் காரணி வெளிப்படையாகவே அம்பலமாகியுள்ளது. அரசாங்கத்தின் உள்ளே இருக்கும் பிரிவினைவாதமும், குழுவாதமும் இங்கே பாரிய நெருக்கடியாக மாறியிருக்கிறது. தேர்தல் இயக்கத்தை ஓர் முன்னணியாக நின்று வெற்றி பெறுவதற்கு பதிலாக, குழுவாத தன்மையை செயலிழக்கச் செய்ய முடியாத பரிதாப நிலைக்கு அரசாங்கம் அமிழ்ந்துக்கிடக்கிறது.

சந்திரிக்காவின் வழிகாட்டலுக்கு தோழ்கொடுப்போம் என்று கூறும் நால்வரைக் கொண்ட தம்பலே அதற்கு பிரதான சாதனமாகவுள்ளனர். இது ஏனைய தலைவர்களிடம் மேன்மேலும் நெருக்கடியை உயர்த்தியுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணி உளளே மாத்திரமல்ல அதற்கு அப்பாலும் நெருக்கடிக்கு முகம் கொடுக்றிது. முன்னணியின் இருப்பை பாதுகாக்கும் கட்சிகளும் குழுக்களிடையே அவ்வாறான நெருக்கடியை சந்திக்கிறது. தமக்கு தேவையான ஒரு பகுதிக்காக மலின அரசியலில் ஈடுபடும் இவர்க்ள் மாகாணசபையில் தமது பங்கிற்கான யுத்தத்தை ஆரம்பித்துள்ளனர். அவை தொண்டமான் தனக்குரிய பங்கிற்கும், அஷ்ரப் தனது பங்கிற்கும் தமிழ் கட்சிகள் பங்கிற்காகவும் தொடரும் யுத்தம் வெளிக்கிழம்பியுள்ளது.

இங்கே வட-கிழக்கில் மாகாணசபை தேர்தலை நடத்தாது பொதுஜன முன்னணியின் அதிர்ஷ்டமாக கருதினாலும், மேல் மாகாணம், மத்திய, ஊவா போன்ற மூன்று மாகாணங்களிலும் தீர்வுகாணமுடியாத முன்னணின் அதிகார போட்டியாக இருக்கும்.

தமிழ் மக்களையோ, முஸ்லிம் மக்களையோ முன் அரணாக பயன்படுத்தி, அதன் மூலம் அவர்கள் மத்தியில் இனவாதத்தை பரப்பி அதன் ஊடாக தமிழ், முஸ்லிம் அப்பாவி மக்களை பிரிவினைவாதம் வரை இழுத்துச் செல்லும் இவர்களது பரம்பரை பழக்க

இவ்வாறான அனைத்து செயல் நடவடிக்கைகளும் மக்கள் முன்னால் பாரியதோர் கேள்வியை முன்வைத்துள்ளது. எல்லாத் தேர்தல்களிலும் தமது தேவைகளை பூர்த்தி செய்வதற்காக போட்டியிடும் இவ்வகையிலானோர் தமது தேர்தல் வெற்றிகளுக்காக மோசடி, ஊழல், யுத்தம், போட்டி போன்றவைகள் சகாரண விடயங்களாக அமைந்துள்ளன.

அவை பிரிவினைவாதத்தை பலவிட்டு போஷிக்கவும், யுத்தத்தை காண்பித்து அதன் வெற்றிகளை காண்பித்து மக்களை ஏமாற்றவும், அவ்வாறு முடியாத போது தணிக்கை கொண்டுவரவும், போன்ற சகலதுறைகளிலும் தென்படுகிறது. அதிகார போட்டியும், காடைத்தனத்தையும் முன்னோக்கி வருவதால் இவைகளை கவனத்தில் கொள்ள வேண்டியவையாகும். ஜனநாயகத்துக்காக போராடியோர் மக்களை ஏமாற்றி ஆட்சியதிகாரத்தை பறிப்போர் இப்போது தமது வேடத்தை மாற்றியமைத்து ஐ.தே.க. வின் ஜனநாயகத்துக்காக உயிர் கொடுக்க ஆரம்பித்துள்ளனர்.

கடந்த உள்ளூராட்சி சபை தேர்தலை விட மோசமான முறையில் வாக்கு கொள்ளைக்கு அரசாங்கத்தின் அமைச்சர்கள் திட்டமிட்ட சதிகளின் மூலம் நபர்களை தயார் படுத்தியுள்ளதும் இவைகளை உறுதிப்படுத்தும் சம்பவங்களாகும்.

எல்லாவிதமான அடக்குமுறை, நெருக்கடி, மோசடி முன்னால் பறிபோகப்போவது மக்களின் ஜனநாயகமேயன்றி வேறெதுவுமல்ல. தாம் விரும்பிய நபருக்கோ,கட்சிக்கோ வாக்களிக்கும் உரிமையை பறித்து அதன் மூலம் சுயலாபங்களை அடைவதற்கான செயல்பாடுகளும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது.

எனவே இம்முறை நடத்தபோகும் தேர்தலில் புனள்ளடி இடுவதற்கு முன் வாக்காளர் என்ற அடிப்படையில் மீண்டும் ஒருமுறை தனது கடமையை எண்ணிப்பார்க்க வேண்டியுள்ளது. ஜனநாயகத்தை பறிப்பதற்கு எதிராக, காடைத்தனத்திற்கு, பலாத்காரத்திற்கு எதிராக, ஸ்தாபன ரீதியில் ஒன்றுபட்டு இம்முறை தேர்தலில் தமது வாக்குச் சீட்டை பயன்படுத்துவதற்கான தேவை வாக்காளர்களுக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

படிப்பகம்

# ஊழல் மோசடியின்

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளராக செயல்படும் விஜேபால மெண்டிஸ் தற்போது தனது கட்சியின் போலி விணை பரீட்சைக்கு உள்ளாகியிருக்கிறார். தற்போதய அரசாங்கம் கொண்டுவந்த லஞ்ச ஆணைக்குழுவின் முடிவின் படி கடந்த ஐ.தே.க. ஆட்சிகாலத்தின் ஒரு ஏக்கர் காணி 2 ரூபாய் பெறுமதிக்கு பெரும் தொகையான ஏக்கர் காணியை இவர் பெற்றுக் கொண்டதையிட்டே குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. அரசாங்க தரப்பினரால் மும்மொழியப்பட்ட பிரேரணைப்படி இப்போது அவர் தனது குடியியல் உரிமையை இழக்கும் இறுதிக் கட்டத்தில் இருக்கிறார். இப்போதைய ஐ.தே.க. மோசடிக்காரர்கள் இல்லாத கொடுமைக்காரர்கள் இல்லாத புனிதமான கட்சியாகவே தம்மை இனம் காட்டியிருப்பதால், விஜேபால மெண்டிஸின் பிரச்சினையில் இக்கரைக்கு அக்கரைப் பச்சையாக அனைவரையும் பாதுகாத்துக் கொள்ளும் நிலமையே போலி விணை கமிட்டியின் ஊடாக காலத்தை கடத்திய வண்ணமிருக்கின்றார்கள். அவ்வாறு காலத்தை கடத்துவதால் தனது கட்சிக்கு நீண்ட ஆயுள் நிலவும் என்ற அப்பாவி நம்பிக்கையோடு செயல்படுகின்றனர்.



எப்படியாயினும் இந்த விஜேபால மெண்டிஸின் பிரச்சினை மூலம் சமூகத்தின் முன்னாள் எழும் பல கேள்விகளுக்கு விடை தேடிக் கொள்ள வேண்டிய அதேவேளை பாரியதோர் கலந்துரையாடல் ஒன்றுக்கு தயாராகவும் வேண்டும். பொதுஜன முன்னணி அரசாங்கம் விஜேபால மெண்டிஸின் நிலம் தொடர்பான ஊழல் பற்றி இவ்வாறு கோஷமெழுப்புவதன் மூலம் எதிர்பார்ப்பது என்ன? இந்த காணி மோசடி தொடர்பான பிரச்சினையை முதன்மையாக கொண்டுச் ஐ.தே.க.வின் ஊழல் மோசடி நிறைந்த உடலை மீண்டும் சமூகத்தின் முன்னால் நேரடியாக அம்பலப்படுத்துவதே அரசாங்கத்தின் குறிக்கோளாக இருக்கலாம். அடுத்த இலக்கு என்னவெனில், ஐ.தே.க.வின் ஊழல் மோசடி தொடர்பாக கோஷ இரைச்சலினூடே, தம்மால் மேற்கொள்ளப்படும் ஊழல் தொடர்பான பிரச்சினைகள் அனைத்து விடயங்களையும் மூடி மறைத்துவிடுவதற்கேயாகும். அல்லது, ஊழல் பேர்வழிகளாக முதன்மை நிலமைகளை பெற்றுள்ள ஐ.தே.க. ஊழலின் சாக்கடையை கலத்து, அதன் மூலம் வீசப்படும் துர்நாற்றத்தின் மூலம், தமது ஊழல் மோசடியின் துர்நாற்றத்தை மூடிமறைப்பதற்கேயாகும். இப்போது, இந்த இரண்டு குறிக்கோள்களும் எவ்வளவு தூரம் நிறைவேறப் போகிறது.

விஜேபால மெண்டிஸினால் செய்யப்பட்ட ஊழல் தான் ஐ.தே.க. ஆட்சிகாலத்தில் செய்யப்பட்ட எல்லா ஊழல் மோசடியின் மோசடிக்காரர்களின் குறியீடாக நிலவுகிறது. அதனால் விஜேபால மெண்டிஸ் கட்சியிலிருந்து நீக்கப்படுவாரானால், அவ்வாறு நீக்குவதற்கு ஐ.தே.க. முடிவெடுக்குமானால் 'தமது ஜன்ம பாவங்கள் தீரும் ஒருமுறை வணங்கினால் களனி கோவிலை' என்று (சிங்கள மக்கள் கூறுவது போல்) அதன் மூலம் சகல மோசடிகளுக்கும் பிராயசித்தம் தேடிக்கொள்வதற்கு ஐ.தே.க.விற்கு முடியுமாயிருக்கும். அதன் மூலம் ஊழல் மோசடிக்காரர்கள் இல்லாத ஐ.தே.க. என்று தம்மை இனம் காட்டுவதற்கான ஓர் சந்தர்ப்பமும் ஐ.தே.க.வுக்கு கிடைக்கும்.

இறுதியாக இவ்வாறான ஒரு முடிவுக்கு விஜேபால மெண்டிஸின் பிரச்சினையில் ஐ.தே.க வருமானால், அரசாங்கம் தனது குறிக்கோளை நிறைவு செய்து கொள்ள முடியாது போன நெருக்கடிக்குள்ளாகும். முடிவாக இவ்வாறான ஊழல் நாடகத்தின் மூலம் அரசாங்கம் செய்திருப்பது ஐ.தே.க.வை சுத்தம் செய்து, புதிய முகமூடிகளை அணிந்துக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுத்ததே என்று எவராவது தர்கிப்பாரானால் அதில் தவறு எதுவுமிருக்க முடியாது.

எப்படியாயினும், ஐக்கிய தேசிய கட்சி தனது ஆட்சி காலத்தின் போது செய்திருக்கும் மாபெரும் மோசடிகளும் ஊழல் பற்றி கவனத்திலெடுக்கும் போது, விஜேபால மெண்டிஸின் காணிப் பிரச்சினை ஐ.தே.க.வின் ஊழல் பத்திரத்தில் மேலே அல்ல கீழ் பகுதியிலேயே இருக்கும். அரசாங்கம் இங்கு தேர்ந்தெடுத்திருப்பது, ஐ.தே.க.வின் ஊழல் பேர்வழிகளையல்ல ஒரு பெருச்சாலியை மாத்திரமே தேர்ந்தெடுத்திருக்கிறது. அரசாங்கம் ஒருவரையே குறியாகவும் இலக்காகவும் கொண்டுள்ளது. இதனால் நாம் மேலே கூறியது போல் அரசாங்கம் பரிதாபகர நிலைக்கு உள்ளாவது தவிர்க்க முடியாத சம்பவமாக இருக்கிறது.

அடுத்த காரணி என்னவெனில், இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் தமது ஊழல் மோசடியை மூடி மறைக்க பொதுஜன ஐக்கிய முன்னணியினால் முடியுமா? தற்போதய அரசாங்கத்தின் பல அமைச்சர்கள் ஈடுபடும் ஊழல் மோசடி துஷ்பிரயோகம் தொடர்பான கலந்துரையாடலை இதன் மூலம் தடுத்து நிறுத்த முடியுமா?

இது, அடுத்ததாக எம்முன்னால் எழுகின்ற கேள்வியாகும்.

இப்போது, பல ஊடகங்கள் மூலம் அம்பலப்படுத்தியுள்ளதற்கேற்ப பொதுஜன ஐக்கிய முன்னணியின் அரசாங்கத்தினால் பல கெபினட் அமைச்சர்கள் மீது ஊழல்



மோசடி குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இதுநாள் வரை, அவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டது தொடர்பாக எவரும் இன்றுவரை நீதிமன்றமோ அல்லது எதுவித சட்ட நடவடிக்கையிலோ இறங்கியதாக தகவல் இல்லை.

பிரதானமாக ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருப்பது அரசாங்கத்தில் சில முக்கிய அமைச்சர்களுக்காகும். துறைமுக புனர்வாழ்வு அமைச்சர் அஷ்ரப்பும், ஏ.எச்.எம்.பௌசி, நிமல் சிறிபால த சில்வா, ரத்தின சிறி விக்கிரமநாயக, மஹிந்த ராஜபக்ஷ உட்பட இன்னும் சில அமைச்சர்களும் பிரதியமைச்சர்களுமாவர். இதேபோல் ஜனாதிபதியின் பொது ஊடாக ஆலோசகராக செயல்படும் சனத்குணதிலக மீது இவ்வாறான குற்றச்சாட்டு அடிக்கடி சுமத்தப்பட்டு வந்திருக்கிறது.

ஐ.தே.க.ஆட்சி காலத்திலும் அதன் அமைச்சர்களும் உயர் பதவி வகித்தவர்களுக்கும் இவ்வாறான குற்றச்சாட்டுகள் நிறையவே இருந்தன அவ்வாறான குற்றச்சாட்டுகளில் அதிகமானவை பொய் அல்ல உண்மையே ஆகும்.



பொதுஜன முன்னணியின் அமைச்சர்கள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டு தொடர்பாக கவனிக்கும் போது உண்மைகளே அதிகம், இதுநாள்வரை தம் மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் குற்றங்கள் தொடர்பாக போதுமான விளக்கம் கொடுப்பதற்கு அமைச்சர்கள் தோல்வி கண்டுள்ளதால் அவ்வாறான குற்றங்கள் உண்மையென ஏற்றுக்கொள்வதற்கு எல்லோருக்கும் தடையெதுவுமிருக்க வாய்ப்பில்லை.

எப்படியாயினும் கடுமையான பொருளாதார நெருக்கடியால் சிக்கித் தவிக்கும் இலங்கை மக்களுக்குரிய பணத்தின் பெரும் பங்கை விழுங்குவது, நாட்டை ஆளும் அமைச்சர்களென்றால், அவ்வாறான நிலைமைகளின் கீழ் ஓர் நாட்டின் முன்னேற்றத்தைப்பற்றி சிந்திப்பது கூட ஓர் ஏமாற்றமாகும். அதிகாரத்தையும் சலுகைகளையும் பெற்றோர், அவ்வதிகாரத்தை பாவித்து அதனூடாக தமது பரம்பரைக்குப் போதுமான பணத்தை தேடிக்கொள்ள விளைவார்களானால், நாட்டை முன்னேற்றத்திற்கு கொண்டு வருவது எப்படி? மோசடியின் மூலம் ஒவ்வொரு பெரும்புள்ளிகள் சுரண்டும் பணத்தை சேர்த்தால், அந்த பணத்தை போதிய கவனத்தோடு நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படுமானால் நாடு எவ்வளவு தூரம் அபிவிருத்தியடைந்திருக்

நாம் மறந்துவிடக் ...
விடயம் என்னவெனில்

மோசடி ஊழல் கணக்கி...
ஆயிரக்கணக்கில் அல்ல...
மில்லியன்களாகவே
கணக்கிடப்படுகின்றது.

ஊழல் மோசடி என்...
முதலாளித்துவத்தின்
உடன்பிறப்பாகும்.
'முதலாளித்துவம் மூன்று
ஓட்டைகளாகும். அதை
கைகளால் இரண்டை மூ...
ஒரு ஓட்டையில் வடிந்தே...
புதிதாக முதலாளித்துவம்
தொடர்பாக எதையும்

**ஊழல் மோசடி என்பது முதலாளி...**
**'முதலாளித்துவம் மூன்று ஓட்டைகளாகு...**
**மூடினாலும் ஒரு ஓட்டையில் வடிந்தே...**
**தொடர்பாக எதையும் கூறுவதற்கி...**
**நிலமைகளின் கீழ், ஊழல் என்பது...**
**நாற்றமெடுக்கும் செயற்பாட்டி...**
**மக்களின் வாக்குகளால் ஆட்சியதிகாரத்...**
**மில்லியன் கணக்கில் ஊழலில் ஈடுப...**
**சொத்துக்களை தேடிக்கொள்வதற்கு எ...**
**இலங்கையின் அழுகி நாற்றமெடுக்...**
**முறையின் ஊழல் தொடர்பாக தொடர்...**
**வேண்டியது ச...**

கூறுவதற்கில்லை. அழு...
நாற்றமடிக்கும் நிலமைக...
கீழ், ஊழல் என்பது
முதலாளித்துவத்தில் அழு...
நாற்றமெடுக்கும் செயற்ப...
ஓர் அறிய குறியீடாகும்.

மக்களின் வாக்குகள...
ஆட்சியதிகாரத்துக்கு வ...
இவர்கள், பல லட்ச மி...
கணக்கில் ஊழலில் ஈடு...
தமக்கு கோடிக்காணக்க...

www.padippakam.com



தேடிக்கொள்வதை
கூறுவது? இதன்
யின் அழகி
ம் பின்தங்கிய



லங்கா நிறுவனத்தின் 40 வீத பங்கை விற்பதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் முடிவெடுத்துள்ளது. இதனால் ஏற்பட்டுள்ள நட்டம் பல மில்லியன்களாகுமென்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

### பிரான்ஸில் வீடும் காணியும்!

ஜனாதிபதியின் மிகவும் நெருங்கிய ஆலோசகர் அண்மையில் இலங்கைக்கு வந்திருந்த டீ.டீ.ஊ. நிறுவன திரைப்பட குழுவினருக்கு, இலங்கையில் படப்பிடிப்பு

# இரண்டு நிறங்கள்

## பச்சை, நீலம் ஊழல் பற்றிய ஓர் அறிமுகம்!



வேலைகளை செய்வதற்கான அனுமதியை பெற்றுக் கொடுத்துள்ளதால் குறிப்பிட்ட அனுமதிக்கு சந்தோஷமாக (கப்பமாக) பிரான்ஸில் சுகபோக வீடொன்றும் காணியும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. 'சல்மன் ருஷ்டியின்' கதையை பின்னணியாக கொண்டு தயாரிக்கப்படும் இக்கதையை திரைப்படத்தின் செயல்பாட்டுக்கு இலங்கை அரசாங்கத்தின் அனுமதியை பெற்றுக் கொடுத்ததற்கு 'சந்தோஷமாகவே' இந்த காணியையும் வீட்டையும் பெற்றுக்கொண்டுள்ளார் ஜனாதிபதியின் அனுமதி இப்பட தயாரிப்புக்கு கிடைத்தும், பின்பு முஸ்லிம் எம்.பி. மார்களின் எதிர்ப்பினால் அனுமதி வாபஸ்பெறப்பட்டது. ஆனால் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் படி குறிப்பிட்ட ஆலோசகருக்கு பிரான்ஸில் வீட்டையும் காணியையும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள, அனுமதி இரத்துச் செய்யப்பட்டாலும், சந்தோஷம் இரத்துச் செய்யப்படவில்லை....!

### முக்கூட்டு ஊசியும், சேலய்ன் மோசடி!

பௌசி சுகாதார அமைச்சராக இருந்த காலகட்டத்தில் குறிப்பிட்ட தரம் குறைந்த முக்கூட்டு ஊசியும், காலாவதியாகிவிட்ட சேலய்ன்களையும் தருவித்திருந்தார் பின்பு இது அம்பலமானதும் பெரும் தொகையான பணம் லஞ்சமாக குறிப்பிட்ட நிறுவனத்திலிருந்து கிடைத்துள்ளதால் காலம் கடந்துவிட்ட சேலய்ன் பற்றிய தகவல் வெளியாகின. இது தொடர்பாக விரிவானதொரு விசாரணை நடாத்தப்படவில்லை. ஆனால், சிறு குழந்தைகள் உட்பட பல நோயாளர்கள் இந்த மருந்தினால் பாதிக்கப்பட்டனர் என்பது தெரியவந்தது.

துவ முறையின் ஊழல்
தொடர்கதையை
புரிந்துகொள்ள
வா?

### பர் லங்கா மோசடி!

லங்கா கவன் கம்பனிக்கு
ா பங்கில் 40 வீதத்தை
கம்பனிக்கு விற்பனை
து, மிகப் பெரும்
ன லஞ்சம்
ணக்கில்)
ந்தின் உயர் மட்ட

றப்பாகும்.
ால் இரண்டை
தலாளித்துவம்
மடிக்கும்
ல் அழகி
ாகும்.
கள், பல லட்ச
காணக்கான
து? இதன் படி
லாளித்துவ
புரிந்துகொள்ள

ள் பெற்றுக்கொண்டே
) கம்பனிக்கு
ள்ளதாக தெரியவருகிறது.
அம்பலமாகியிருக்கும்
படி 378 கோடி
ம்.
ந்தொகையான லஞ்சம்
கைக்கு
ள்ளதால் மிகவும்
ன நிலமையின் கீழ்
ப் நிறுவனத்துக்கு ஏயர்

### சிமெந்தி விழுங்கி!

நிமால் சிறிபால டி சில்வா வீட்டமைச்சராக இருந்த போது பெரும் தொகையிலான சீமெந்து விற்பனையில் மோசடி ஏற்பட்டதாக தகவல்கள் அம்பலமாகின. அதாவது அப்போது கூறப்பட்டது என்னவெனில், சீமெந்து மோசடியான முறையில் விற்பனை செய்யப்பட்டதும் ஒரு சில சீமெந்து கம்பனிகளிடமிருந்து லஞ்சம் வாங்கும் வியாபாரம் நன்றாகவே நடந்ததாக தெரியவருகிறது.

### துறைமுக பைரவன்.

அமைச்சர் அஷ்ரப்பிற்கு துறைமுகத்தை கொடுத்தது தொடர்பாக பலரிடம் விசனத்தையே ஏற்படுத்தின. அவர் தனது சொந்த நலன்களுக்காக துறைமுகத்தின் சொத்துக்களை பயன்படுத்தினார் என்று பெரும்பாலான பத்திரிகைகள் தொடர்ந்தும் அம்பலப்படுத்தியிருந்தன. துறைமுகத்தின் குறைபாடாக உள்ள தலைவர் பதவியை நிரப்பாது தமக்கு சார்பான அதிகாரிகளை பயன்படுத்தி அவர்கள் ஊடாக மிகப் பெரியதோர் மோசடியில் ஈடுபட்டிருப்பதாக ஊடகங்கள் ஊடாக தெரியவருகின்றது. எதுவித தங்குதடையின்றி இவைகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக் கின்றது. இம்முறை "செஞ்சக்தி"'' "யின் பின்பக்கச் செய்தியில் புள்ளிவிபரங்களோடு கூடிய செய்தி ஒன்றும் உள்ளது.

### கிரடிட் காட் விளையாட்டு!

தபால் தொலைத்தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர தொடர்பாக கடந்த வாரம் 'கிரடிட் காட்' கணக்குகள் தொடர்பான செய்திகள் வெளிவந்து சலசலப்பை ஏற்படுத்தியது. தான் மேற்கொண்ட வெளிநாட்டு விஜயத்தின்போது, இலங்கை டெலிகம் பங்கை வாங்கியிருக்கும் ஜப்பான் கம்பனியின் தலைவரின் 'கிரடிட் காட்' மூலம் தானும் செலவு செய்ததாக அவர் வேறு வழியில் பின் ஏற்றுக் கொண்டிருந்தார்.

### வியாபாரியின் பரிசாக வீடு!

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின், இதுவரை அதிக தடவை (உத்தியோக பூர்வ செயலுக்கு அப்பால்) வெளிநாடு செல்லும் அமைச்சரொருவர் ஒரு வியாபாரியின் தேவைக்காக தங்கம் கடத்தி வருபவராக செயல்படுகிறார். இந்த வியாபாரி இப்போது குறிப்பிட்ட அமைச்சருக்கு பரிசாக கொழும்பு நாவல பிரதேசத்தில் சுகபோக வீடொன்று கட்டப்படுகிறது அதே வேளை தொடர்ந்தும் தங்கம் கடத்தும் வியாபாரம் ஜோராகநடந்தவண்ணமுள்ளது.

## இதோ! மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் மாகாணத் தலைவர்கள்!

மக்கள் விடுதலை முன்னனி இம்முறை மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்திருப்பது, மாகாண சபையை எதிர்க்கும் தேர்தல் இயக்கத்தை இந்த மாகாண சபை தேர்தல் களத்தில் முன்கொண்டுச் செல்வதற்கேயாகும். அதேபோல் நாட்டை அழித்து குட்டிச்சுவராக்கும் பொ.ஐ.மு, ஐ.தே.க. வினது பாதக அரசியலுக்கு எதிராக மக்களை அணிதிரட்டும் ஒரு களமாகவே ம.வி.மு. இம் மாகாணசபைத் தேர்தலை பயன்படுத்த எண்ணியிருக்கிறது. இத் தேர்தல் போராட்டத்தை உயிரூட்டி மேலெழச் செய்வதற்கு மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு கடந்தவாரம் கூடி மாகாணசபை தேர்தலில் போட்டியிடுவதற்கு முக்கிய உறுப்பினர் பட்டியலை வெளியிட்டது. அரசியலை தமது வயிற்று பிழைப்புக்காக பணம் சேர்க்கும் தொழிலாக கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் ஏனைய கட்சிகளுக்கு மாகாண தலைவர்களை தேர்ந்தெடுப்பது பாரிய சிக்கல் நிறைந்த பிரச்சினையாக மாறியுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் தான் மக்கள் விடுதலை முன்னணியில் அரசியல் குழு குறிப்பிட்ட மாகாண சபைகளுக்கான எதுவிதமான இழுபறியின்றி மாகாண தலைவர்களாக போட்டியிடுவது யார் என்பதை முடிவு செய்தது.

இது அந்த மாகாணங்களுக்கான தலைமை அபேட்சக தோழர்கள் தொடர்பாக ஓர் சுருக்கமான தகவல்.

### மேல் மாகாணத் தலைவர் தோழர் விமல் வீரவங்ச:



இவர் கொழும்பு மாநகர சபை உறுப்பினர். மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளர். தோழர் விமல் வீரவங்ச இம்முறை மேல் மாகாண சபைத் தேர்தலில் தலைமை வேட்பாளராக தேர்தல் களத்தில் இருப்பார்.

### சபரகமுவாவுக்கு தோழர் அஜித் குமார:

சபரகமுவ மாகாண சபை தலைவராக போட்டியிடுவதற்கு மக்கள் விடுதலை முன்னணியினால் தோழர் அஜித் குமாரவை தேர்ந்தெடுத்துள்ளது. இவர் கம்பஹா பிரதேச சபை உறுப்பினரும், மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு உறுப்பினருமாவார்.



### வடமேல் மாகாணத்துக்கு தோழர் சேனாரத்ன டி சில்வா:



வடமேல் மாகாணத் தலைவராக போட்டியிடுவது தோழர் சேனரத்ன சில்வாகும். நடந்து முடிந்த எல்லாத் தேர்தல்களிலும் தேர்தல் போராட்டத்திற்கு உயிரூட்டிய தோழர் சேனாரத்ன டி சில்வா மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய கமிட்டி உறுப்பினராவார்.

### வடமத்திய மாகாணத்துக்கு தோழர் லால் காந்த:

வட மத்திய மாகாண சபை தேர்தல் களத்தை உயிரோட்டமிக்கதாக மாற்றுவதற்காக, அம் மாகாணசபைத் தலைவராக மக்கள் விடுதலை முன்னணி அரசியல் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது சோஷலிச தொழிலாளர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர், ம.வி.மு. மத்திய குழு உறுப்பினர் தோழர் கே.டி.லால் காந்த அவர்களாவார்.



### ஊவாவிற்கு தோழர் ரோஹித:



ஊவா மாகாணத்தின் தலைமை அபேட்சகராக (மாகாணத் தலைவராக) களத்தில் இறங்கியிருப்பவர் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னால் இணைப்பாளர் தோழர் ரோஹித திலகரத்தினாவாகும். இவர் பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பட்டதாரியாவார்.

### மத்திய மாகாணத்திற்கு தோழர் அநுர குமார திஸாநாயகா:

மத்திய மாகாணத்துக்கு தேர்தல் களத்தை வழிநடத்துவதற்காக அம்மாகாணத் தலைவராக மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு தேர்ந்தெடுத்திருப்பது தோழர் அநுர குமார திஸ்ஸாநாயகாவையே. இவர் முன்னாள் சோஷலிச மாணவர் சங்கத்தின் தேசிய அமைப்பாளரும் களனி பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பட்டதாரியுமாவார்.



இம்முறை தெற்கில் தென்மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக அரசாங்கம் திட்டவட்டமாக எதையும் குறிப்பிடாததால் தென் மாகாண தலைவர் யாரென்பதை முடிவெடுக்கக் கூடாதென ம.வி.மு. அரசியல் குழு முடிவெடுத்துள்ளது. நடத்த போகும் மாகாணசபைத் தேர்தலில் குறிப்பிட்ட மாகாணங்களில் தலைவராக போட்டியிடும் தோழர் உட்பட அபேட்சக தோழர் தோழியரை தெளிவுபடுத்தும் கூட்டங்கள் அந்தந்த மாவட்டங்களில் நடைபெறுவதாக தெரியவருகிறது.

படிப்பகம்

www.padippakam.com



யதார்த்தம் என்பது இருளை அகற்றி சகல போலிகளையும் முற்றாக களைத்தெறியும் உண்மையாகும். யதார்த்தத்தை பார்ப்பதற்கு கேட்பதற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்ட ஒன்றல்ல. யதார்த்தத்தைக் காண்பதற்கு சகல அறிவுகளும் (புலனுணர்வுகள்) தர்க்க ரீதியாக பயன்படுத்த வேண்டும்.

இவ்வாறான தத்துவார்த்த பிரவேசிப்பு தேவைப்படுவது எமது சமூகத்தின் தற்கால யதார்த்த நிலமைகளை புரிந்து கொள்வதற்காகும். அப்படி இல்லாது திகதி, சம்பவங்கள், ஊடே ஊடறுத்து செல்வதால் உண்மை நிலையை புரிந்து கொள்ள முடியாது போய்விடும். நடைமுறையில் இருக்கின்ற யதார்த்த சிக்கலையும் நெருக்கடிகளையும் புரிந்து கொள்ள முடிவதும் அவைகளுக்கு விடையை தேடிக்கொள்ள முடிவதும் தத்துவார்த்த அடிப்படையில் யதார்த்தத்தை நோக்கினால் மாத்திரமே.

தற்போதைய யதார்த்தத்தை தேடுவதற்கு முன்பு எம்மை சூழ நடைபெறும், தென்படும், எண்ணங்களை சிந்தித்துப்பார்ப்போம். மே மாதம் 13ம் திகதிக்கு 'ஜயசிக்குறு' இராணுவ **நடவடிக்கைக்கு ஒரு வருடம் பூர்த்தியானது. இதில் அடங்கியிருப்பது ஒரு வரி வார்த்தைகள்** மாத்திரமல்ல. அதனுள் பல விடயங்கள் அடங்கியிருக்கின்றன. வட பகுதிக்கான தரை மார்க்கத்தை திறந்து கொள்ளும் ஜயசிக்குறு நடவடிக்கை இலக்கு பல்லாயிரக்கணக்கான உயிர்களை பலியெடுத்துள்ளது. பலியெடுத்துக் கொண்டிருக்கிறது. எதிர்காலத்தில் பலியெடுக்கவும் திட்டமிடப்படுகிறது. அது வட-கிழக்கில் மாத்திரமன்றி அதற்கு அப்பால் சென்று முழு நாட்டையும் விழுங்கிக் கொண்டிருக்கின்றது. வடக்கைப் போல் தெற்கிலும் யுத்தத்தை மக்கள் அனுபவிக்க வண்ணமிருக்கின்றனர். முழு இலங்கை வாழ் மக்களும் யுத்த கொடுமையின் அனுபவத்தை பெற்று அநாதைகளாகவும், முடமாகவும் முடக்கிவிடப்பட்டுள்ளனர். அப்படி இல்லை எனில் அச்சத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். தொழிலுக்காக அதிகாலையில் வெளியே செல்வோர் திரும்பி வருவோர் என்பது நிச்சயமற்ற

தாக்கப்பட்டுள்ளது. உயிர்கள் அபாயத்திலும் நம்பிக்கையற்றதாக முழு நாட்டையே பீடித்துள்ளது. இவை மக்கள் முகம் கொடுக்கும் நிலமை. ஆனால் யுத்தத்தின் சிற்பிகள் அதை

ஒரே கட்டமைப்பில் ஏற்றுக் கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு சமாதானத்திற்காக யுத்தமும் சமாதானத்திற்காக சமாதான இயக்கம் என்ற இரண்டு, போலித்திட்டங்களும் பல

பயன்படுத்துவதற்கு எதிராக செயல்படுவது மிகவும் வரவேற்கத்தக்க செயலாகும். இங்கே அரசாங்கமும் எல்.ரி.ரி.ஈ. இயக்கமும் என்ற இரு சாராருக்கும் தலையிடுவதால் அவரது சேவை சுயாதீனமாக பக்கச் சார்பற்றதாக இருப்பதாக தெரியவருகின்றது. மேலும் இவரது வருகைக்கு

# வந்து போன ஒட்டுனு







# விட்டுப்போன பிரச்சினைகள்



**வெற்றிகரமாக விற்பனை செய்கின்றனர். இலாபம் அடைகின்றனர். யுத்தத்துக்குள்'** மறைந்துக்கொண்டு செய்யப்படும் ஊழல், மோசடி, துஷ்பிரயோகம் இவைகளில் அடங்கும். யுத்தத்தை நோக்கி விரலால் காட்டிவிட்டு நியாயமாக மக்கள் போராட்டத்தையும் மக்கள் கோரிக்கைகளை அடக்குமுறை செய்வதும் இவையுள் அடங்கும் யுத்தத்திற்கு எதிராக சமாதான திட்டத்தை ஆரம்பித்து யுத்தத்தினால் வயிற்றுப் பிழைப்பை நடத்துவோரும் இதில் அடங்குவர். யுத்தவாதிகளாக இருந்து கொண்டு ஈட்டும் இலாபத்தைப் போலவே சமாதானப் பேர்வழிகளாக இருந்து கொண்டும் செய்ய முடியும். ஒரு தடவை இவர்கள் யுத்தத்தின் மூலமும், அரசியலமைப்பு மூலமும் சமாதானத்தைப் பெற்றுத் தருவதாக கோசிக்கின்றனர். மக்களுக்குத் தேவைப்படுவதெல்லாம் எப்படியாவது சமாதானமேயாகும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். அதனால் அஅவர்கள் சமாதானத்திற்கான யுத்தத்தையும் போலி சமாதான இயக்கங்களையும்

வடிவங்களில் நிலைபெற்றுள்ளன. அவை தேசிய ரீதியிலும் நடைபெற்ற வண்ணமுள்ளன. இவை அனைத்தின் ஊடாக நாம் காணும் உண்மை யதார்த்தத்தை தேடிச் செல்வதே முக்கிய காரணியாகும். அப்படி இல்லையெனில் யதார்த்தமற்ற பொய்களுக்கு நாம் ஏமாற நேரிடும்.

யதார்த்தத்தை நோக்கி நாம் நெருங்குவதற்கு நல்லதோர் உதாரணம் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த ஐ.நா.சபை பிரதிநிதி ஒலரா ஒட்டுனு ஆகும். நாம் புரிந்துகொள்ள வேண்டியது ஒலரா என்ற நபரை அல்ல. அவர் பின்புலமும் அரசியலையும் அவர் மூலமாக வெளியிட்ட யதார்த்தத்தையே ஆகும். ஒலரா ஒட்டுனு ஐ.நா. பிரதிநிதியாவார். அது மாத்திரமல்ல யுத்தத்துக்கு சிறுவர்களை பயன்படுத்துவதற்கு எதிராக செயல்படுவதே அவரது நடவடிக்கையில் முக்கிய பிரிவாகும். மேலோட்டமாக பார்க்கும் போது இவரது இலங்கை விஜயம் பாதிப்பான ஒன்றல்ல. யுத்தத்திற்கு சிறுவர்களை

அரசாங்கமும் எல்.ரி.ரி.ஈ. இயக்கமும் வரவேற்பை கொடுத்தன. இதன் படி எல்.ரி.ரி.ஈ. இயக்கமும் மனித உரிமையை நேசிக்கும் மனிதாபிமானிகளாகும் எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தை பயங்கரவாத இயக்கமென்று தடை விதித்த அமெரிக்காகவும் ஒலரா ஒட்டுனு எல்.ரி.ரி.ஈ.யுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு மௌனம் சாதித்ததன் மூலம் விருப்பத்தை தெரிவித்திருக்கின்றது. இவை எல்லாம் வரவேற்கத்தக்கவையாகும். அது நாம் காண்பது யதார்த்தமென்று நாம் உணர்வதாலேயே ஆகும். அதனால் நாம் இங்கு காணுவதெல்லாம் யதார்த்தமா என்று வினவ வேண்டும்.

அதற்காக முதலாவது பிரவேசிப்பாக வேண்டியது. ஒலரா ஒட்டுனு இலங்கைக்கு விஜயம் செய்த போது இலங்கையில் நிலவிய சுற்றுச் சூழல் என்னவென்று நாம் உற்று நோக்க வேண்டும். ஜயசிக்குறு நடவடிக்கை தனது பிறந்த நாளை கொண்டாடிய போது

யுத்தத்தால் மடிவதற்கு இன்னும் பலரை வேண்டி நின்ற போது,எல்.ரி.ரி.ஈ.க்கும் அத் தேவை அவ்வாறே இருந்தது. அரசாங்கம் யுத்தத்திற்கு ஆட்கள் போதாததால் அதற்கு தீர்வு தேடிக்கொண்டிருந்த வேளை, அதனால் இராணுவத்தை விட்டோடிய 15,000 பேர் மீண்டும் வந்து சேர்வதற்கு பொது மன்னிப்பு கால எல்லையை அறிவித்திருந்தது. ஆனால் பொதுசன ஊடகங்களுடே வெளியிட்ட வேண்டுதல் முடிவில் 5,000 பேர் சரணடைந்திருந்தனர். சரணடையாத 10,000 பேரை தேடிப்பிடிப்பதற்கான நடவடிக்கையும் மேற்கொண்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. எப்படியாயினும் அரசாங்கத்தின் இலக்கு பூர்த்தியாகவில்லை. அதனால் அரசாங்கம் மாணவர்களை இராணுவத்தில் சேர்த்துக்கொள்ளும் நடவடிக்கையை மேற்கொள்ள முயற்சித்தது. இராணுவ தலைமைப்பீட அதிகாரிகளை உற்சாகப்படுத்தி இதற்கான வேலைத்திட்ட த்தை கட்டவிழ்த்து விட்டிருந்தது. வீடியோ படங்களை பாடசாலைகளில் காண்பித்து சொற்பொழிவுகளை நடத்தி யுத்த வெறியை தூண்டுவதே இதன் குறிக்கோளாகும். பின்பு **மாணவர்கள் பாடசாலையை விட்டு போகும் போது இராணுவத்தில் சேரும்படி** அவர்களை வற்புறுத்துவதே இதன் குறிக்கோளாகும். சாதாரண மக்களின் பிள்ளைகளின் கல்விக்கு பாதிப்பு இதன் மூலம் ஏற்படப்போவதில்லையா? இவ்வாறான சந்தர்ப்பத்திலேயே ஒலரா ஒட்டுனு இலங்கைக்கு பிள்ளைகள் யுத்தத்துக்கு சேரக் கூடாதென்றே இலங்கைக்கு வருகிறார்.

இப்போது எமது இப்பிரச்சினை தொடர்பான முக்கிய காரணியை காண உட்புகுவோம். ஒலரா ஒட்டுனுவின் வருகை மூலம் யதார்த்தத்தை காணுவது எப்படி என்ற காரணியே. முதலாவதாக ஒலரா ஒட்டுனு ஐ.நா. சபையின் பிரதிநிதி என்ற காரணியை தேடிப்பார்ப்போம். ஐ.நா. சபை என்பது, ஏகாதிபத்திய தேவைகளுக்காக கட்டியெழுப்பப்பட்ட ஓர் அரசியல் கருவியாகும். எனவே இவரது இலங்கை விஜயம் ஏகாதிபத்திய குறிக்கோளோடு முரண்படுமானால் அமெரிக்கா இடையூறு விளைவிக்காமல் இருக்கப்போவதில்லை. எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தை அமெரிகாவில் பயங்கரவாத

இயக்கமென பெயரிடப்பட்டுள்ளது. அதனால் ஒட்டுனுவின் இலங்கை விஜயத்திற்கு அமெரிக்காவின் நிலைப்பாடு முக்கியமானதாகும். ஒலரா ஒட்டுனு எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்துவதை ரகசியமாக கொண்டுவரவில்லை. ஆனால் இது அமெரிக்க மௌனத்தின் மூலம் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அனுமதி அளித்திருக்கிறது. யதார்த்த நிலமைகளுக்கேற்ப இது ஆச்சரியப்பட வேண்டிய சம்பவம் அல்ல. தற்கால உலகில் அமெரிக்கா பிரிவினைவாதத்தின் தந்தையாகும். பாதுகாவலாகும். எல்.ரி.ரி.ஈ. என்பது பிரிவினைவாதத்தின் குழந்தையாகும். அக்குழந்தையின் அடாவடித்தனம் (அரசியலமைப்பின் மூலம் படிப்படியாக ஈழத்தை பெற்றெடுப்பதற்கு எல்.ரி.ரி.ஈக்கு பொறுமையின்மையால்) செயல்பாடுகளின் போது அமெரிக்கா சற்று கடுமையைக் காட்டிக் கொள்கிறது. அதாவது எல்.ரி.ரி.ஈ. பயங்கரவாத இயக்கமென்று பெயரிட்டது, ஆனால் அமெரிக்கா எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தின் பகைவன் அல்ல, நண்பனும் பாதுகாவலனுமாகும்.

ஒட்டுனுவின் விஜயத்தன் மூலம் **அமெரிக்காவின் யதார்த்தம் நிர்வாணமாக்கப்படும் அதேவேளை இலங்கை அரசாங்கத்தின் நிலையும்** அதே கதியாகும். இலங்கை அரசாங்கமும் எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தை அண்மையில் தடை செய்தது. ஆனால் ஒலரா ஒட்டுனு எல்.ரி.ரி.ஈ.யை சந்திப்பதற்கு அரசாங்கத்தின் அனுசரணை வழங்கப்படுகின்றது. மே 6ம் திகதி வவுனியாவுக்குச் சென்ற ஒலரா ஒட்டுனு கூட்டுப்படைகளின் தலைமையகத்தில் உயர் அதிகாரியையும் சந்தித்துள்ளார். தளதா மாளிகைக்கு எல்.ரி.ரி.ஈ.யின் தாக்குதலோடு எழுந்த மக்கள் எதிர்ப்பை தணிப்பதற்காக எல்.ரி.ரி.ஈ. இயக்கம் தடை செய்யப்பட்டபோது அது உண்மையான தடையல்ல. கூட்டுப்படை தலைமையகத்திலிருந்து வெளியேறிய ஒட்டுனு நேரடியாக மடு பிரதேசத்திற்குப் போய்

எல்.ரி.ரி.ஈ. இயக்கப் பிரதிநிதிகளை சந்திக்கிறார். இந்த நிலமைகளில் மறைமுகமாக எல்.ரி.ரி.ஈ. இயக்கத் தடையை அரசாங்கம் நீக்கியுள்ளது. எல்.ரி.ரி.ஈ., அரசாங்கத்திற்கிடையிலான தொடர்பு மீண்டும்

7ம் பக்கம் பார்க்க....

www.padippakam.com





மே் பக்கத் தொடரச்சி
வந்து போன ஒட்டுனு........

_பூர்வமாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மரிக்காவைப் போலவே இலங்கை சாங்கத்தைப் போலவே எல்.ரி.ரி.ஈ. ப்பென்பது போலியான ஒன்றென டுணு வருகை மூலம் காண்பித்த ர்த்தமாகும்.

இப்போது ஒட்டுனு ஐ.நா.சபையின் நிதியாக வெளிப்படுத்திய யதார்த்தம் ன? இங்கு யுத்தம் தொடர்பான அவரது ந்தும் நிலைப்பாடும் முக்கியமானவை. ருக்கேற்ப அவரின் கடமை 18 துக்கு கீழ்ப்பட்டவர்களுக்கு திரமேயாகும். ஒட்டுனுவிற்கிணங்க 18 திற்கு மேற்பட்டவர்கள் யுத்தம் புரிவது த உரிமை மீறும் செயல் அல்ல. லது அப்படி நடந்தாலும் அவரால் வும் செய்ய முடியாது. அதைப்பற்றி டிப்பார்ப்பதற்கு அவருக்கு தேவையுமல்ல. _சாலையை வட்டு போகும் பிள்ளைகளை ாணுவத்திற்கு சேர்த்துக்கொள்வதென்பத த உரிமைகள் மீறும் செயல் அல்ல. ற்று அவர் மனித உரிமையை துகாத்துக் கொடுக்கும். 18 வயது ந்தை நாளை 18 வயதைக் கடந்ததும் ாணுவத்தில் சேருவதென்பது மனித ரிமைக்கு எதுவித பிரச்சினையுமல்ல. தன்படி ஒட்டுனுவால் இன்று மனித ரிமையை பாதுகாத்துக் கொடுக்கப்படுவோர் ளை சகல உரிமைகளையும் ல்லாதவர்களாக்கப்படுவதாக சகல _வடிக்கைகளும் அரசாங்கம் ற்கொண்டுள்ளது. இராணுவத்தில் சேராத லங்கையில் பெரும்பாலான பிள்ளைகள் த்தத்தினால் ஒடுக்குமுறைக்குள்ளாகி ந்தவிதமான உரிமைகளற்று ( றைந்தபட்ஷம் கல்வி, பாதுகாப்பு, ஓய்வு ான்றவற்றுக்குக்கூட) இருக்கின்றனர்.

யுத்தத்தினால் மாத்திரமல்ல தலாளித்துவ முறையினால் தோற்றுவித்த கல நெருக்கடிகளால் தற்கால குழந்தைகள் ழந்தைப் பருவத்தை இழந்த நிலைக்கு ள்ளப்பட்டுள்ளனர். இவைகள் எதுவும் ட்டுனுவின் செயல்பாடுகளில் இடமில்லை. லும் வயது வந்தோர் யுத்தத்தினால் ண்டோடு அழிக்கப்பட்டாலும் அவருக்கு துவும் செய்ய முடியாது. யதார்த்தம் அதுவே ஒட்டுனு மாத்திரமல்ல இலங்கைப் பிரச்சினையை தீர்ப்பதற்காக முன்வரும் காதிபத்திய நிறுவனங்களின் பிரதிநிதிகள் அனைவரும் சாதாரண மக்களின் பிரச்சினைக்கு அப்பால் உள்ளனர். அப்படியானால் ஒட்டுனுவின் வருகையின் _ண்மையாக நோக்கம் என்ன? அது ிரகசியமான ஒன்றாகும். இன்று _ங்களுக்கும் எனக்கும் தெரியாத ஆயினும் ாளை எல்.ரி.ரி.ஈ. அரசாங்கத்தினதும் டவடிக்கைகளும் அசைவுகளும் ிந்துகொள்ளக்கூடிய குறுகியகால ிரகசியமாகும். ஆனால் ஒரு உண்மை ாத்திரம் தெளிவு படுகின்றது. ஒலரா ட்டுனுவின் விஜயம் யுத்தத்தை றுத்துவதற்கல்ல, ஆயினும் அவரது ருகையின் மூலம் பிரிவினை வாதத்திற்கு ல சாதக நிலமைகள் தோன்றியுள்ளன. தலாளித்துவ நிறுவனங்களின் பிரதிநிதிகள் இவ்வாறு செயல்படுவது தமது எஜமானுக்கு பெரும்பான்மையான இலாபத்தை ஈட்டிக் கொடுப்பதற்கேயாகும். அதுவே அவர்களது ட்டாயப் பணியாகும்.

ஒட்டுனு யுத்தத்தின் சாபத்தை விட்டு விட்டு ஏதோ ஒன்றை திருடிச் சென்றுள்ளார். யுத்தத்தினால் மக்களுக்கு சொந்தமாவது யுத்தத்தை விற்று ஈப்பிடுவோரால் சுமத்தப்படும் சுமை ாத்திரமேயாகும். யுத்தத்தினால் மரணத்தை தழுவுவோர், கொல்லப்படுவோர் அநாதைகளாக, அகதிகளாக ஆக்கப்படுவோர் சாதாரண அப்பாவி மக்களேயாவர். யுத்தத்தை காண்பித்து அதன் மூலம் கொண்டுவரப்படும் ஒடுக்குமுறை சட்டங்களாலும் இரையாக்கப்படுவது அப்பாவிகளே. யுத்தத்தினால் தோற்றுவிக்கப்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு இரையாவதும் அப்பாவிகளே. யுத்தத்தின் மறுபக்க (இராணுவத்தை விட்டோடிய இராணுவத்தினர் செய்யும் சமூக விரோத நடவடிக்கைகள்) விளைவுகளால் பாதிக்கப்படுவதும் அப்பாவிகளே. அதனால் நேர்மையாக இதய சுத்தியோடு யுத்தத்தை நிராகரிப்பது மக்களே ஆகும். யுத்தத்தை வியாபாரமாக கொண்டோர் தொடர்ந்தும் வேண்டி நிற்பது யுத்தமே. அதனால் அரசும் எல்.ரி.ரி.ஈ.யும் வேறு எந்தவொரு இயக்கமும் இலாபம் ஈட்டுவதற்காக கொண்டு செல்லப்படும் கொலைக்கார, படுகொலை யுத்தத்தை பாட்டாளிவர்க்க இயக்கமும் கண்டிப்பதோடு, கடுமையாக எதிர்க்கிறது.

மக்கள் விடுதலை முன்னணியின் யுத்தம் தொடர்பான நிலைப்பாடு அதுவே. தேசிய பிரச்சினையூடாக தோன்றியுள்ள சகல பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண வேண்டிய தேவை அதிகமாக இருப்பது மக்களுக்கேயாகும். பிரச்சினையை தீர்ப்பதற்கு தடையாக யுத்தத்தை கொண்டு செல்வோரே இருக்கின்றனர். சமாதானத்திற்காக யுத்தமும், சமாதானத்திற்காக யுத்தத்தையும் சமாதானத்திற்காக சமாதான இயக்கமும் ஒலரா ஒட்டுனு போன்றோர் தலையீட்டால் ஏற்படப் போவது மக்களுக்குரிய சந்தர்ப்பம் இல்லாது போன்றதேயாகும்.

ஆகவே தேசியப்பிரச்சினை தீர்ப்பதற்கும் அதற்காக யுத்தம் செய்யும் உரிமையை பெற்றுக் கொண்ட அனைவரும் அதை விட்டகல வேண்டும். அப்போது மக்கள் யுத்தமற்ற சூழ்நிலையில் மக்கள் தீர்வைத் தேடிக்கொள்வர். நாம் புரிந்கொள்ள வேண்டிய யதார்த்தம் இதுவே.

மாகாணசபை தேர்தலுக்குமுன ....
8ம் பக்கத் தொடர்

கம்ஊதாவ பிரதேசத்தை மையப்படுத்தி பெரியதொரு மதச்சடங்குகள், மற்றும் சிரமதான நடவடிக்கைகளையும் ஹேமா பிரேமதாச ஒழுங்கு செய்திருந்தார். சஜித் பிரேமதாச உட்பட பிரேமதாசவாதிகள் பலரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இதன் நோக்கம் கட்சிக்குள் தமது பலத்தை உறுதி செய்வதற்காகவும் அதனை வெளிக்காட்டவுமான ஒரு தந்திரோபாயமென தெரிவிக்கப்படுகிறது. இந்த பலத்தை காட்டுவதற்கு ஹேமா பிரேமதாசவின் வேண்டுகோளினை நிறைவேற்றிக் கொள்ளும் தந்திரோபாயமும் உள்ளடங்குகிறது.

இந்த நிலமையின் காரணமாக ரணில் விக்கிரமசிங்க குழுவினர் பாரிய சிக்கல்களுக்கு முகம் கொடுத்து வரும் அதே நேரம் ஹோமா பிரேமதாசவை மத்திய கொழும்பு ஐ.தே.க. வேட்பாளராக மாகாணசபை தேர்தலில் போட்டியிட நேரிட்டால் மீண்டும் பிரேமதாசா குழுவினர் பலப்படும் அதே நேரம் அதனைத் தடுப்பதற்கு முயற்சித்தால் ஐ.தே.க.வுக்குள் பிளவு உருவாகக் கூடும் என்று நம்பப்படுவதால் சிக்கல்களுக்கு உள்ளாக நேரிட்டுள்ளது.

மேலதிக தகவல்களின் படி இந் நடவடிக்கைகளின் பின்னாள் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் சிலரும் இருப்பதாகவும் தெரியவருகின்றது. சஜித் பிரேமதாச மற்றும் மங்கள சமரவீர ஆகியோருக்கிடையில் நீண்டகாலமாக இடம்பெற்று வரும் உறவு காரணமாக ஹோமா பிரேமாதாச குழுவினரை தனியாக மாகாணசபைத் தேர்தலுக்கு ஈடுபடுத்த செயற்டுவதாக தெரிகிறது. அவர் உள்ளிட்ட குழுவினர் மாகாணசபைத் தேர்தலில் தனியாக போட்டியிட்டால் அதற்கு சகல விதத்திலும் உதவி புரிய அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளனர். இதற்கிடையில் அநுர பண்டாரநாயக்க உள்ளிட்ட ரணில் விரோத ஐ.தே.க. தரப்பினர் ஹோமா பிரேமதாச தனியாக போட்டியிட்டால் அதற்கு ஒத்துழைக்கவும் தயாராக இருப்பதாக தெரியவருகின்றது.

அரசாங்கத்துக்கும். அநுர பண்டாரநாயக்கவுக்கும் இடையில் சமீப காலமாக ஏற்பட்டு வரும் உறவும் இதன்போது ஹோமா பிரேமதாச குழுவினரின் நடவடிக்கைகள் பலப்பட ஏதுவாகியிருக்கிறது. சில நாட்களுக்கு முன் நடந்த ஏயர் லங்கா விற்பனை குறித்த பாராளுமன்ற விவாதத்தின் போது பொ.ஐ.மு. தலைமையை அநுர பண்டார நாயக்கா விமர்சிக்காது விட்டதும் இந்த இரகசிய உறவின் காரணமாகவே என்று தகவல்களிலிருந்து தெரிகின்றது.

எவ்வாறு இருந்து போதும் எதிர்வரும் மாகாண சபை தேர்தலில் ஹோமா பிரேமதாசா உள்ளிட்ட பிரேமதாசா வாதிகள் தனியாக போட்டியிட நேரிட்டால் அதன் மூலம் ஐ.தே.க.வுக்கு பாரிய தாக்கம் (குறிப்பாக மேல் மாகாண சபைக்குள்) ஏற்பட வாய்ப்பு இருப்பதாக அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். ரணில் விரோத குழுவினரின் தேவையாக இருப்பதும் அவ்வாறு தனியாக போட்டியிடுவரை பலப்படுத்தி அதன் மூலம் ஐ.தே.க.வுக்குள் ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடிகளை பயன்படுத்தி கட்சித் தலைமைக்கு எதிராக செயற்படுவதே. இம்முறை மாகாண சபைத் தேர்தலின் போது மேற்படி உண்மைகள் வெளித்தெரிய வரும்.

8ம் பக்கத் தொடர்
அஷ்ரபின் துறைமுக ....

இதற்குப் புறம்பாக அந்தக் காலப்பகுதியில் அமைச்சு உட்பட ஏனைய நிறுவனங்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ள துறைமுகு அதிகாரசபைக்குச் சொந்தமான மனித வளங்கள் அளவு கணக்கிடுவதற்காக தரவுகள் பூரணமாக தமக்கு இதுவரை அறிவிக்கப்படவில்லையென்றும் தெரிவிக்கின்ற கணக்காய்வு அறிக்கை, கிடைக்கப்பெற்ற துறைகறைச் சேர்ந்த தரவுகளின் படி அந்த நிறுவனங்களினால் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பாவிக்கப்பட்டுள்ள துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான மனித வளத்தின் மொத்தப் பெறுமதி 3,021,931.00 ரூபா என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்த சகல செலவுகளும் சட்டவிரோதமானவையென்றும் கணக்காய்வு அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேற்படி காலப்பகுதிக்குள் முஸ்லிம் காங்கிரஸின் நடவடிக்கைகளுக்காக கட்அவுட்களுக்கும், அலங்கரிப்புகளுக்காகவும் மட்டும் துறைமுக அதிகார சபை 23,25,760.00 ரூபா செலவிடப்பட்டுள்ளதுடன் அமைச்சர் அஷ்ரப்பின் அடிப்படைவாத உருவகிப்பை ஊதிப்பெருப்பிப்பதற்காக முஸ்லிம் மத உற்சவங்களுக்காக மட்டும் 7,45,900.00 ரூபா செலவிடப்பட்டுள்ளது. அது போல அமைச்சின் காரியாலயம் அமைப்பதற்கு என்ற போல் துறைமுக அதகார சபைக்குச் சொந்தமான வளத்தில் 40,82,700.00 ரூபா பணத்தையும் அமைச்சின் இன்னுமொரு காரியலாயத்தை அமைப்பதற்கு என்ற பேரில் 1,18,98,076.00 ரூபாவும் பெறப்பட்டுள்ளது.

இதற்குப் புறம்பாக அமைச்சர் அஷ்ரப்பின் அமைச்சின் செயலாளர்களின் தொடுக்கல் வாங்கலுக்காகவும் மோசடிகளுக்காகவும் தடையின்றி நடைபெற்றுவருகின்ற நிலைமையும் உருவாகியுள்ளது. கடந்த வருடத்தில் டிசம்பர் 27ம் திகதியில் துறைமுகத்தை விற்பனை செய்வதற்கு எதிராக நடத்தப்பட்ட வேலைநிறுத்தத்தின் சாட்டில் ஒரு அமைச்சின் செயலாளரினால் துஷ்பிரயோகமாக 64,000 ரூபா பணத்தை மோசடி செய்துள்ளதும் இதில் ஒரு உதாரணமாகும். அந்த வேலைநிறுத்தத்தின் போது வெளியிலிரந்து தொழிலாளர்களை கொண்டு வர வேண்டியேற்பட்டதெனவும் அந்த ஊழியர் ஒருவருக்கு 500.00 மற்றும் 1000.00 என்ற வகையில் வழங்க வேண்டியேற்றட்டதெனவும் கூறியுள்ள இந்த அமைச்சு செயலாளரினால் இந்த 64,000 ரூபா பணம் எடுக்கப்பட்டுள்ளது. இருந்தபோதும் கணக்காய்வின்போதுஇந்த பணம் எடுக்கப்பட்டதற்கானஎந்தவித முறையான ரசீதுகளும் இல்லாததுடன் அதற்காக பணத்தைப் பெற்றுக் கொண்டதாக தொழிலாளர்கள் முத்திரையின் மேல் கையெழுத்திட்ட தஸ்தாவேஃக்களும் சமர்ப்பிக்கப்படவில்லை.

இதனை விட துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான19 ஏக்கர் காணியையும் அந்த சொத்தை பராமரிப்பதற்கென்று 1993-03-12 அன்று துறைமுக அதிகாரசபை மற்றும் டொக்யார்ட் நிறுவனத்தில் இடம்பெற்றுள்ள கலந்துகொள்ளும் உடன்படிக்கையின்படி டொக்யார்ட்டினால் துறைமுக அதிகார சபைக்கு மாதாந்தம் 32,80,000.00 ரூபா வழங்கப்பட்டிருக்க வேண்டும். அந்த தொகை 1993 நவம்பர் 12ஆம் திகதியிலிருந்து இது வரை துறைமுக அதிகார சபைக்கு வழங்கப்படவிலையென்றும்தெரியவருகிறது. மேற்படி உடன்படிக்கையில் 6வது பிரிவின் பிரகாரம் இந்த 32,80,000.00 ருபாவை மாதாந்தம் பெற்றுக்கொள்ளுகின்ற வகையில் துறைமுக அதிகார சபை மற்றும் டொக்யார்ட்டுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கை கையெழுத்திட்டிருக்க வேண்டுமென்ற போதும் அதுவும் கையெழுத்திடுவதற்கு துறைமுக அதிகார சபை அக்கறை செலுத்ததாமலிருப்பதன் உள்நோக்கமென்ன என்று தெரியவில்லை. இதன் படி 19 ஏக்கர் காணியையும் அதற்குச் சொந்தமான சொத்துக்களையும் டொக்யார்ட்டினால் இலவசமாகவே பராமரிக்கப்பட்டுள்ளது. 1993 நவம்பர் மாதத்திலிருந்து மாதாந்தம் வழங்கப்படாமலிருக்கும் தொகையான 32,80,000,00 ரூபாவை இது வரை செலுத்தாதிருப்பதனால் மாதங்கள் கடந்த பின் கூட்டிப் பார்த்தால்,180,400,000.00 பெரிய தொகை சேர்ந்துள்ளது.அது துறைமுக அதிகார சபைக்கு செலுத்தப்பட்டிருக்க வேண்டும் என்றாலும்இது வரை அது செலுத்தப்படாதுள்ளது. அதற்குப் பதிலாக வேறொரு அதிகாரியின் கைக்கு மாறியுள்ள பணமாக ஆகியுள்ளது என தகவல்களில் இருந்து விளங்கக் கூடியதாக உள்ளது.

எவ்வாறிருந்த போதும் இது போன்ற மிகப் பெரிய மோசடி மற்றும் துஷ்பிரயோகங்கள் கொள்ளையடிப்புகள் என நடந்த போதும் தனக்கு எதிராக இந்த அரசாங்கம் எந்த வித நடவடிக்கையும் மேற்கொள்ளாது என்பதை அமைச்சர் அஷ்ரப் சரியாக விளங்கி வைத்தள்ளார். கடந்த சில தினங்களுக்கு முன்பு தனது கட்சியின் வருடாந்த மாநாட்டின் போது அலங்கரிக்கப்பட்டுந்த கட்அவுட்களில் ஜனாதிபதி சந்திரிகாவின் உருவத்தையும் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் உருவத்தையும் அமைத்து விளம்பரப்படுத்தியிருந்தார் என்பதையும் வாசகர்கள் அவதானிக்க வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com

# செஞ்சக்தி

198/19 பஞ்சிகாவத்தை வீதி,கொழும்பு-10. ☎-345594 E-MAIL-niyamuwa@slt.lk

மக்கள் விடுதலை முன்னணியின் சர்வதேச அமைப்பகத்தின் முகவரியும் தொலைமடல் இலக்கமும்
☆ ARUNODAYA, B.P. 485, 75528 PARIS, CEDEX 11, FRANCE,
FAX: 0033 1 40330414
☆ P.O. BOX 94, CARNEGIE, VICTORIA 3163, AUSTRALIA,
FAX: 0061 3 94369312
☆ E-MAIL-JVP @ i bekkoame.or.jp

## மாகாண சபை தேர்தலுக்கு முன் ஐ.தே.க பிளவு படுகிறது!

ஐக்கிய தேசியக் கட்சியில் அதன் தலைமைக்குள் சமீப காலமாக இடம்பெற்று வந்த உள்முரண்பாடுகள், மாகாண சபைத் தேர்தல் கிட்டுகையில் பிளவு வரை உறுதியாகப் போகக் கூடுமென செஞ்சக்திக்கு கிடைக்கின்ற தகவல்களிலிருந்து தெரியவருகிறது.

ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைக்கு எதிராக பிரேமதாசவின் கொள்கைகளை தூக்கிப்பிடிக்கின்ற குழுவொன்று உள்ளுக்குள் வளர்ந்து வந்துள்ளமை இரகசியமானதல்ல. அண்மைய தகவல்களின்படி ஜனாதிபதி பிரேமதாசவின் மனைவியான ஹேமா பிரேமதாச இம்முறை மாகாண சபை தேர்தலில் தன்னை கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடத் தருமாறும் அதற்குப் புறம்பாக தான் மத்திய கொழும்பு தொகுதி அமைப்பாளராகவும் உத்தியோகபூர்வமாக தன்னை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் அப்படி செய்யத்தவறினால், 'பிரேமதாச வாக்குச அனைத்தையும் வேறு பிரிக் வகையில் தான் உட்பட ச குழுவினர் நாடு முழுவ முடியுமான அனை தொகுதிகளிலும் தனிய பட்டியலை சமர்ப்பிக் போவதாகவும் ஐ.தே.க. தலைமை உத்தியோகபூர்மற்ற வகை அறிவித்துள்ளார். கடந்த நாட்களுக்கு முன்னர் கதிர்காமத்

7ம் பக்கம் பார்க்க

## அஷ்ரப்பின் துறைமுக மோசடி!

அமைச்சர் அஷரப் துறைமுகத்துக்குச் சொந்தமதன வளங்களை தனதிஷ்டத்தின் பிரகாரம் தனது சொந்தத் தேவைகளுக்குப் பாவித்து வருவதாக துறைமுகத்தில் நம்பத்தகுந்த வட்டாரங்களின் மூலம் தெரியவருகிறது. இவ்வாறான மோசடிகளின் தொடர்ச்சியாக அமைச்சர் துறைமுகத்துக்குச் சொந்தமான பணத்தில் 36,57,620.00 ரூபாவை தான் வசித்து வரும் ஆடம்பர வீட்டுக்காக பயன்படுத்தி வருவதாக தெரியவருகிறது.

கொழும்பு 07,இல் விஜித்த யாபா புத்தகக் கடையினருகில் அமைந்துள்ள அமைச்சர் அஷ்ரப்பின் வீட்டுக்கு துறைமுகத்தின் பணத்தை பயன்படுத்தி வருவது குறித்த செய்திகள் 1998 ஜனவரி 01ஆம் திகதியிடப்பட்ட எனது இலக்கம்: டுளு∴ஓ∴97∴07∴42 எனும் அறிக்கையின் பிரகாரம் வெளித்தெரியவருகிறது. அந்த அறிக்கையின் படி அமைச்சர் அஷ்ரப், கொழும்பு-07இல் அமைந்துள்ள தனது வீட்டுக்கு ஏயார் கண்டிசன்கள் நான்கை அமைப்பதற்காக 6,57,250.00 ரூபாவையும், மின்சாரத்துக்கென 25,000,00 ரூபாவையும், தொலைபேசி பொருத்துவதற்காக 1,50,000.00 ரூபாவையும், குளியல் அறையை சொகுசுபடுத்துவதற்கு, சிவிலிங், பென்ரி கபட் பொருத்துகல் என்பவற்றுக்கு 7,77,000.00 ரூபாவையும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான காரியாலயத்தை அமைப்பதற்கு 3,40,000,00ரூபாவையும் புதிய மலசலகூடம், பிலியட் அறை, களஞ்சிய அறை, புகைப்படக் கலைஞர்களுக்கான காரியாலயத்துக்கென அமைப்பதற்கு 7,10,000,00 ரூபாவையும் சோதனைச் சாவடிக்கும் கேட் என்பவற்றை அமைப்பதற்கு 9,92,745.0 பாவையுமாக துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான பணத்தை பயன்படுத்தியுள்ள ஆண்டறிக்கையில் இ விபரங்களை வெளியிடப்படுள போதும் அது அமைச்சரி உத்தியோகபூர்வ வாசஸ்தலம் என தலைப்பிலேயே உள்ளது. அதன் அமைச்சர் அஷ்ரப் தன வீட்டுக்கென துறைமுகத்துக் சொந்தமான பணத்தில் 36,57,620. ரூபாவை பயன்படுத்தியுள்ளார் என தெரியவருகிறது.

இதற்குப் புறம்பாக, துறைமு அதிகார சபையினால் கணக்காய்வ தலைமைக் களத் திற் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்களின்ப 1995ஆம் ஆண்டிலிருந்து 197 மாதம் வரையான காலப்பகுதிக்கு துறைமுக அதிகார சபைக் சொந்தமான 80,004,346.00 ரூ பெறுமதியான வளத்தை (பொருள் மற்றும் சேவை) அமைச்சு உட்பட வேறு நிறுவனங்களுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

7ம் பக்கம் பார்க்க...

## மாகாணசபை தேர்தலின் போது மக்களின் கடமை

இன்னுமோர் மாகாணசபைத் தேர்தலுக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டவண்ணமிருக்கிறது.

அது வட-கிழக்கு மாகாணசபையைத் தவிர்ந்த ஏனைய மாகாணசபைகளுக்குரிய காலம் முடிவடைவதோடு அண்மையில் இந்த மாகாணசபைகளுக்கான தேர்தல் நடத்தப்படப்போகிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் கீழோஅல்லது ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தின் கீழோ வேறு எந்தவொரு அரசாங்கத்தின் கீழோ தேர்தல் என்பது ஜனநாயகரீதியான சமூக செயல்பாடுகளுக்கு இன்றியமையாத ஒன்றாகும்.

ஆயினும் நடக்கப்போகும் தேர்தல் என்பது இப்போது இலங்கை வாழ் மக்கள் முகம் கொடுக்கும் சவால்களின் முன் முன்னால் வரப்போகும் தேர்தல் மிகவும் தீர்மானகரமான கட்டமென்பதை இப்போது சமூகத்தின் வலியுறுத்திய வண்ணமிருக்கின்றது.

1997 பொதுசன ஐக்கிய முன்வணி அரசாங்கத்தின் கீழ் நிடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல் இலங்கை சரித்திரத்தில் இன்னுமோர் மோசடிமிக்க தேர்தலென தேர்தல் ஆணையாளரும் தவிர்க்க முடியாது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையதும்.

அது மாத்திரமல்ல பொதுஜன முன்னணி அரசாங்கம் தனது அதிகாரம் தொடர்பான சவால்களின் போது தான்தோன்றித்தனமாக இரண்டு மாகாணசபைகளை கலைத்து அதிகாரத்தை தமது கைக்கு கொண்டு வருவதற்காக மேற்கொண்ட ஜனநாயக விரோத செயல்பாடுகள் ஜீவமான சாட்சியாக மக்கள் முன் உள்ளது.

இப்போது நடைபெறப்போவது அவ்வாறு ஜனநாயகத்திற்கு விரோதமான முறையில் கலைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட மாகாண சபைகளின் கால எல்லை முடிவடைவதோடு திகதி குறிக்கப்படும் தேர்தலுக்கேயாகும்.

அரசாங்கம் என்ற அடிப்படையில் தனது இயலாமை கழுத்து வரை நிறைந்து கழுத்தை நெருக்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் அவைகளை மூடி மறைப்பதற்குமான செயல்பாடுகளின் மூழ்கிடக்கிறது.

தேர்தல், ஜனநாயகம் தொடர்பாக சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் பிரிவினரைக் கொண்ட இலங்கைவாழ் மக்களை பிரச்சினைகளினால் ஒன்றிணைக்கப்படுவது தேர்தலிலேயாகும்.

17 வருட ஐ.தே.க.ஆட்சி ஆரம்பத்தின் போது ஜே.ஆரினால் 10 வருடத்திற்கு தேர்தல் வரைப்படத்தை சுருட்டி வைப்பதாக மக்களின் முன் வெளியிட்ட அறிக்கைகளுக்கு அப்பால் இந்நாட்டு ஜனநாயகத்திற்கு ஐ.தே.க. அரசில் செய்த அழிவுகளை ஒருபோதும் இந்நாட்டு மக்கள் மறந்து விட மாட்டார்கள்.

இப்போது பொதுஜன முன்னணி அரசாங்கம் தயாராகிக் கொண்டிருப்பதும் அதன் மறுவடிவத்தை வெளிகொண்டு வருவதற்கே என்பது மிகவ் தெளிவாக தென்படுகின்றது.

அதாவது தனது கையாட்களை அழைத்து கள்ள வாக்குகளை போடுவதற்காக பொதுஜன முன்னணி எம்.பி., அமைச்சர்கள் எதிர்கட்சியினரைக் அச்சுறுத்தவும் தாக்குதல் நடத்தவும் காடையர் கும்பலை பயிற்றுவித்து தயார் செய்வதும் அதற்காகவேயாகும்.

படிப்பினைக்காக இலங்கை சமூகம் அளவுக்கதிகமான விலைகளை அர்ப்பணித்தும் பழைய சம்பவங்களையும் பாடங்களினால் பெற்றுக் கொண்டவைகளை எதிர்காலத்திற்கும் நடைமுறை படுத்துவதற்கு அரசாங்கம் தயாராகிக் கொண்டிருக்கிறது.

அண்மையில் நடைபெறப்போகும் மாகாணசபைத் தேர்தல் என்பது எக்காரணத்தினாலும் கைவிடப்பட முடியாத ஓர் அறிய சந்தர்ப்பமாகும்.

அதற்குறிய பிரதான இடையூறுகளை அகற்றி நியாயமான தேர்தலுக்காக தொடர்ந்தும் சமூகத்தில் நிலைபெறச் செய்வதேயாகும்.

மோசடி வஞ்சகர்களுக்கு இடம்கொடாது மக்களுக்கும், சிவில் சக்திகளுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் எவ்வளவு தூரம் முடியுமாயிருக்குமோ அவ்வளவுக்கு அனைத்தையும் நல்ல முறையில் இலங்கை வழி சமூகத்துக்கு தேவையானவற்றை உறுதிப்படுத்தி நிலைநாட்ட முடியும்.

அதேவேளை வாக்காளர் என்றடிப்படையில் தமக்கு சொந்தமான வாக்குச் சீட்டின் முன்னால் இடப்படும் புள்ளடியால், மோசடிகாரர்களின் மோசடிக்கு இசையாத தேர்தல் ஒன்றிற்கான சந்தர்ப்பத்திற்கான கேள்வி இங்கே முக்கியமானதாக அமையும்.

மோசடிகாரர்களுக்கு இடமளித்து பார்த்துக் கொண்டிருக்கும் சமூகத்துக்கு அல்ல, அதற்கு எதிராக தமது வாக்குச் சீட்டை பயன்படுத்தும், செயல்பாடும் மோசடிக்காரர்களிடமிருந்து மீட்டு நியாயமான தேர்தலை பெற்றுக் கொள்வதும் இலங்கை வாழ் மக்களுக்கு இன்று பாரிய சவாலாக உள்ளது.

அவ்வாறான வாக்காளர்களின் மூலம் சமூகத்திற்கு நன்மைகள் பலவற்றை பெற்றக் கொடுப்பதற்காக இலங்கை மக்களுக்கு போதுமான வல்லமையிருக்கிறது. அவ்வாறு ஏற்படுமானால் எதிர்கால அரசியல் பாரிய வெற்றிகளை இலங்கை மக்கள் பெறுவது உறுதி.

## பௌசி மீது வழக்கு!

அரசாங்கத்தினால் தற்போது செயல் முடக்கிவைத்திருக்கும், லஞ்ச ஆணைக்குழுவுக்கு சுதந்திரமாக செயல்படுவதற்கு சந்தர்ப்பம் கிடைக்குமானால், காலாவதியாகிவிட்ட 'சேலய்ன்' தருவிக்கப்பட்டதற்கு எதிராக அப்போது சுகாதார அமைச்சராக இருந்த ஏ.எச்.எம் பௌசிக்கு எதிராக வழக்கு தொடுப்பதற்கு லஞ்ச ஊழல் ஆணைக்குழு தயாராகிகொண்டிருப்பதாக தெரியவருகிறது.ஆணைக்குழுதொடர்பான விசாரணைகளின்போது வழக்கு தாக்கல் செய்வதற்கு போதுமான ஆதாரங்களை திரட்டிவைத்திருக்கிறது.

அதேபோல், நாட்டின் தலைவி உட்பட அரசாங்கத்தின் கெபினட் அமைச்சர்கள்,ராணுவ உயர்மட்ட அதிகாரிகள்,பாதுகாப்பு அமைச்சின் பெரும் புள்ளிகள் உள்ளிட்ட பலருக்கு எதிராக லஞ்ச ஊழல் ஆணைக் குழுவினால் விசாரணைகள் மேற்கெள்ளப்படுவதை அரசாங்கம் செயலிழக்கச் செய்திருப்பதாக தெரியவருகிறது.

## தோழர் எரிசனுக்கு எமது புரட்சிகர அஞ்சலி!



காலி மாவட்டத்தில், ஹபராதுவ தொகுதியில் வெல்ஹேன்கொட கிராமத்தில் வாழ்ந்து வந்த தோழர் சமரவீர விதான ஆராச்சியின் எரிசன் கடந்த வாரம் சுகவீனமுற்றிருந்த வேளையில் எம்மை விட்டு பிரிந்தார். நோய்வாய்ப்பட்டிருந்த சந்தர்ப்பத்திலும் கூட தன்நலனைப் பாராது பொது நலமே வேண்டி நின்ற உன்னத புரட்சிவாதியாவார். அவர் ம.வி.மு.யின் பல வெற்றிகளுக்கு தோழ்கொடுத்து செயல்பட்ட உண்மை புரட்சிவாதியாக தனது வாழ்க்கையை அர்ப்பணித்தவர்.

அவரது இறுதி கிரியைகள் மக்கள் விடுதலை முன்னணி அரசியல் குழு உறுப்பினர் தோழர் அஜித் குமாரவும் பெரும் திரளான மக்களும் கலந்து கொண்டனர். வாழ்க்கை போராட்டத்தை கண்டு ஓடும் மனிதர்கள் மத்தியில் புரட்சிகர வாழ்க்கைக்கு தோழ் கொடுத்த உன்னத புரட்சிவாதி தோழர் எரிசனுக்கு 'செஞ்சக்தியின்' புரட்சிகர அஞ்சலியால் முழந்தாலிடுகிறது.

கொழும்பு 10,பஞ்சிகாவத்தை வீதி இல 198:19 இல் வசிக்கும் டில்வின் சில்வா ஆகிய என்னால் இல 72/2 அவிஸ்சாவலை வீதி,ஊருகொடவத்தை வெல்லம்பிடியாவிலிருக்கும் ரேயுன் கலர் கிறிப்ஸ் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்